# வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

## பொருளடக்கம் - 2015


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | தொலைநோக்கு/ செயற்பணி | 01 - 02 |
| 02. | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோ ஷ கம்பனியின் தலைவரின் செய்தி | 03 |
| 03. | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் பணிப்பாளர் சபை | 04 |
| 04. | திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம் | 05 |
| 05. | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவும் கொள்வனவுக் குழுக்களும் | 06 |
| 06. | திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும் | 07 - 08 |
| 07. | மனித வளங்கள் பகுப்பாய்வு | 09 - 10 |
| 08. | பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பற்றிய விபரங்கள் | 11 |
| 09. | உற்பத்தி தகவல்களும் எதிர்பார்க்கப்படும் குறியிலக்குகளும் | 12 - 16 |
| 10. | திரிபோஷ விநியோக செயற்பாடும் தகவல்களும் | 17 - 20 |
| 11. | இறுதி குறியிலக்கு | 21 |
| 12. | 2015 ஆம் ஆண்டினுள் அடைந்த வெற்றிகளும் முகம் கொடுக்க நேர்ந்த பிரச்சினைகளும் | 22 |
| 13. | நன்றி | 23 |
| 14. | கணக்காய்வு அறிக்கையும் இறுதிக் கணக்குகளும் | 24 - 52 |
| 15. | முகாமைத்துவக் கடிதம் | 53 - 55 |

## தொலைநோக்கு

இலங்கைவாழ் மக்களை

போஷாக்குமிக்க சுபீட்சமான

சிறந்த ஆரோக்கியமிக்க

சமூகமொன்றாக

உருவாக்குதல்

## செயற்பணி

ஆச்சரியம் மிக்க எதிர்கால உலகை
வெற்றிகொள்ள எமது தாய்நாட்டை
சுபீட்சமான, பெருமை கொள்ளத்தக்க, பண்புமிக்க
இலங்கையர் என்னும் தேசிய அடையாளத்தின்
பொருட்டு பொது திறைசேரியின்
அங்கீகாரத்துடன் சுகாதார அமைச்சின்
ஒத்தாசை மற்றும் வழிகாட்டலின் கீழ்
உள்நாட்டு விவசாயிகளை பலப்படுத்தும்
வழங்குகை செயற்பாட்டை நிலைப்படுத்தி
உயர்தரம் மிக்கதும் ஒழுங்கமைக்கப்பட்டதும்
தரம்வாய்ந்ததுமான போஷக்கு மிக்க
திரிபோஷ துணை உணவை சிறந்த
முறையில் தயாரித்து, பொதியிட்டு
ஆரோக்கியத்தை எதிர்பார்க்கும் தேசிய
நலனின் பொருட்டு தொடர்ச்சியாக
விநியோகித்தலும் மேன்மையான சேவையை
அபிமானத்துடன் அர்ப்பணிப்புமிக்க
செயற்பாட்டின் ஊடாக நாட்டையும்
உலகத்தையும் வெற்றி கொள்ளும் சிறந்த
திரிபோஷ குடும்பமொன்றாக உருவெடுத்தலும்
உலக சுகாதார சுட்டெண் குறியிலக்குகளை
நிறைவுசெய்த ஆரோக்கியமிக்க மக்களின்
நலனின் பொருட்டும் அர்ப்பணிப்புடன் கூடிய
முதலாவதும் தனியானதுமான உள்நாட்டுக்
கம்பனியொன்றாதல்.

# வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி தலைவரின் செய்தி



போஷாக்கு மிகுந்த ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு திரிபோஷ துணை உணவை உற்பத்தி செய்து மருத்துவ சிகிச்சையின் போது இலங்கை வாழ் சகல கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், 05 வயதுக்கு குறைந்த நிறை குறைவாக உள்ள பிள்ளைகளுக்கும் இலவசமாக பகிர்ந்தளிப்பது இலங்கை திரிபோஷ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணியாகும்.

அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் சுகாதார அமைச்சராக இருந்த சந்தர்ப்பத்தில் அவரது சிந்தனையின் அடிப்படையில் 2010.09.17 ஆம் திகதி திரிபோஷ நிகழ்ச்சித்திட்டத்தை பூரண அரசுடமை கம்பனியொன்றாக **ஸ்ரீ லங்கா திரிபோஷ லிமிடட்** எனும் பெயரில் நிறுவப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் மொத்த இலங்கை தேவையில் 60% - 70% அளவு மாத்திரமே நிறைவுசெய்ய முடியுமாக இருந்தது.

இலவசமாக விநியோகிக்கப்படும் 100% பயனாளிகளின் தேவையை நிறைவேற்றும் நோக்கில் தற்போதைய சுகாதார அமைச்சர் கௌரவ ராஜித்த சேனாரத்ன அவர்களினால் வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி வழங்கப்பட்டது. இதன் காரணமாக புதிய இயந்திர தொகுதியை வலுவூட்ட நடவடிக்கை எடுத்ததன் மூலம் மொத்த வருடாந்த தேவைப்பாட்டை முழுமையாக இலவசமாக வழங்கும் இலக்கை வெற்றிகொள்வதற்கான ஆரம்ப அத்திவரத்தை இடுவதற்கு முடிந்தமை நாம் இந்த வருடத்தில் மேற்கொண்ட முக்கியமான செயற்பாடு என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

அது மாத்திரமன்றி அவ்வாறு இலவசமாக பயனாளிகளுக்கு வழங்கிய பின்னர் மிகையாக உள்ள 800-900 மெ.தொ. திரிபோஷ அளவை கௌரவ சுகாதார அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, தற்போது மாதாந்த திரிபோஷ உற்பத்தி 2700 மெ.தொ. ஆகும். அதில் 1800 மெ.தொ. அளவு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. 900 மெ.தொ. மிகை சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தரமான உயர் தரத்திலுள்ள இந்த துணை போஷாக்குமிக்க உணவை விசேடமாக பாடசாலை பிள்ளைகளுக்கும் தொழில் புரிவோருக்கும் சலுகை விலையில் கொள்வனவு செய்ய முடியுமாக இருப்பதனால் அவர்களுக்கு அது மிகவும் பிரயோசனம் மிக்கதாக அமையும்.

இந்த கடினமான இலக்குகளை மிகவும் குறுகிய காலத்திற்குள் வெற்றிகொள்வதற்கு என்னை ஊக்கப்படுத்திய அதிமேதகு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள், கௌரவ சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் மருத்துவர் ராஜித்த சேனாரத்ன அவர்கள், பணிப்பாளர் சபை உட்பட சகல ஆளணியினர் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான உற்பத்திற்கு உரிய நேரத்தில் மூலப்பொருட்களை வழங்குகின்ற எனது வழங்குநர்கள் மற்றும் எமக்கு பலவிதத்திலும் உதவி புரிந்த அனைவரையும் நன்றியுணர்வுடன் ஞாபகப்படுத்துகின்றேன்.

எம்.டி.பந்துசேன
தலைவர்
இலங்கை திரிபோஷ கம்பனி

## வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின்

### பணிப்பாளர் சபை - 2015

* தலைவர் - திரு. எம்.டி.பந்துசேன

* பணிப்பாளர் - மருத்துவர் (திரு) பாலித குணரத்ன மஹிபால
  சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் -
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

* பணிப்பாளர் - மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன
  பணிப்பாளர், போஷாக்கு ஒருங்கிணைப்புப் பிரிவு,
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு)

* பணிப்பாளர் - திருமதி ஏ.ஆர்.அஹமட்
  சட்ட உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

* பணிப்பாளர் - திருமதி தேஜா ஹேரத்
  சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்
  கைத்தொழில் தொழினுட்ப நிறுவனம்

* பணிப்பாளர் - மருத்துவர் திருமதி தமயந்தி ஹபுகொட
  சிறுவர் நோய் நிபுணத்துவ மருத்துவர்
  பாணத்துறை பொது வைத்தியசாலை

* பணிப்பாளர் - திரு சின்தக குலரத்ன
  பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்

* திரு.எஸ்.ஆர்.ராஜபக்ஷ
  அவதானிப்பாளர்
  பிரதான கணக்காளர், சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

* திருமதி தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்
  பணிப்பாளர் சபையின் செயலாளர்.

## திரிபோஷ கம்பனியின் சுருக்கமான அறிமுகம்

| | | | |
|---|---|---|---|
| * | முகவரி | - | வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி, த.பெ.17, நீர்கொழும்பு வீதி, கப்புவத்த, ஜா-எல |
| * | தொலைபேசி இலக்கம் | - | 0112 - 236588, 0112 - 237418, 0112 - 233451 |
| * | பெக்ஸ் இலக்கம் | - | 0112 - 237363 |
| * | மின்னஞ்சல் முகவரி | - | thriposha@gmil.com |
| * | அமைச்சு | - | **சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு** |
| * | நிறுவனத்தின் தன்மை | - | சுகாதார அமைச்சின் கீழ் முழுமையான அரசுடைமை கம்பனி |
| * | கம்பனியின் பதிவு இலக்கம் | - | PB/3873 |
| * | பிரதான உற்பத்தி | - | போஷாக்கு நிறைந்த ஆரோக்கியம் மிக்க திரிபோஷா துணைஉணவு |
| * | விநியோக நிலையம் | - | நாடுபூராகவுமுள்ள சுகாதார மருத்துவ நிலையங்கள்<br>பெருந்தோட்டங்கள்<br>சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு நிலையங்கள் |
| * | விநியோகிக்கப்படும் முறை | - | புகையிரத சரக்குப் பெட்டிகள் மற்றும் லொறிகள் மூலம் |
| * | பயனாளிகள் | - | கர்பிணித் தாய்மார்கள்<br>பாலூட்டும் தாய்மார்கள்<br>போஷாக்குத் தேவைப்படும் குழந்தைகள்<br>சில நோயாளிகள் |
| * | மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை | - | அண்ணளவாக பத்துலட்சம் |
| * | வங்கி | - | இலங்கை வங்கி |
| * | கணக்காய்வாளர்கள் | - | கபில ரட்னசிங்க என்ட் கம்பனி<br>(பட்டய கணக்காய்வாளர்கள்)<br>83/1/2 சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொடை |

## வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு - 2015

| | |
|---|---|
| * திரு சின்தக குலரத்ன<br>தலைவர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி | • திரு.நிஷாந்த ஹேவாகம<br>நிதி முகாமையாளர்,<br>ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி |
| * மருத்துவர் திருமதி சாந்தி குணவர்த்தன<br>உறுப்பினர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி | • திரு.ஆர்.எம்.என்.கே.பீ.ரட்னசிங்க<br>கபில ரட்னசிங்க அன்ட் கம்பனி,<br>வெளிவாரி கணக்காய்வாளர். |
| * திருமதி ஏ.ஆர்.அஹமட்<br>உறுப்பினர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பணிப்பாளர் - ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி | • திரு.எல்.ஜே.எஸ்.பிரேமசந்திர<br>உள்ளக கணக்காய்வாளர்.<br>ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி |
| * திரு.எஸ்.ஆர்.ராஜபக்ஷ<br>அவதானிப்பாளர் - கணக்காய்வு முகாமைத்துவக்குழு<br>பிரதான கணக்காளர், சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | |

## பிரதான கொள்வனவுக் குழு
### (60 மில்லியன் ரூபா வரை)

* தலைவர்,
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
* பிரதான கணக்காளர்,
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு
* பணிப்பாளர்
  போஷணை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு
  சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

## சிறிய கொள்வனவுக் குழு
### (10 மில்லியன் ரூபா வரை)

* தலைவர்,
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
* சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு)
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி
* முகாமையாளர் (தரக் கட்டுப்பாடு)
  ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி

## திரிபோஷ கம்பனியின் வரலாறும் தற்போதைய முன்னேற்றமும்

திரிபோஷக் கம்பனியின் முகாமைத்துவப் பணிகள் சுகாதார அமைச்சுக்கு 1976 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டது. முகாமைத்துவப் பணிகளுக்காக கேள்வி கோரப்பட்டதோடு, அதற்காக இலங்கை புகையிலைக் கம்பனி தெரிவு செய்யப்பட்டது. அதுமுதல் 2010 ஆம் ஆண்டுவரையிலும் இதன் நிருவாகப் பணிகள் இலங்கை புகையிலைக் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்தக் கருத்திட்டத்திற்கான சுகாதார அமைச்சின் பங்களிப்பினை மிக நெருக்கமாக திரிபோஷ தொழிற்சாலையின் பராமரிப்பு செலவுகளை மீளளிக்கும் பணிகள் 1987 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று திரிபோஷ கம்பனிக்குச் சொந்தமான காணி, இயந்திர சாதனங்கள் உட்பட ஏனைய வளங்கள் சுகாதார அமைச்சுக்குச் சொந்தமாகின.

நாட்டின் போஷாக்கின்மையை இல்லாதொழிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மிக பலப்படுத்தும் நோக்கில் திரிபோஷக் கம்பனியை அரசாங்கத்திற்கு உடைமையாக்கிக் கொண்டு அதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டது. சுகாதார அமைச்சர் மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர், 2010-09-17 ஆம் திகதியிலிருந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான முழுமையான அரசாங்கக் கம்பனியொன்றாக இந்த திரிபோஷக் கம்பனியானது "வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி" என்னும் பெயரில் சுகாதார அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. இலக்கம் ஜீ.பீ/3873 இன் கீழ் சுகாதார அமைச்சின் துணை நிறுவனமொன்றாக கம்பனிகள் பதிவாளரின் கீழ் புதிய கம்பனியானது பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், 2011-01-07 அம் திகதியிலிருந்து 07 உறுப்பினர்களைக் கொண்ட புதிய முகாமைத்துவ சபையொன்றின் கீழ் வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### உற்பத்திசார் முன்னேற்றம்

2011 ஆம் ஆண்டில் அரசுடைமையாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இலங்கையில் திரிபோஷ பெற்றுக் கொள்வதற்கு உரித்துடைய மாதமொன்றுக்கான பயனாளிகளின் எண்ணிக்கை 928,000 ஆகும். இதன்கீழான பயனாளிகள் -

- கர்ப்பிணித் தாய்மார்கள் ;
- பாலூட்டும் தாய்மார்கள் (குழந்தைக்கு ஆறு (06) மாதங்கள் செல்லும்வரை);
- போசாக்கின்மை காரணமாக நலிவுற்றுள்ள ஆறு (06) மாதங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளும் ஐந்து (05) வயதிற்குக் குறைந்த முன்பள்ளி சிறுவர்களும்;
- எடைக்கமைவாக குழந்தையின் வளர்ச்சிக் குறிப்பில் மூன்றாவது கோட்டுக்குக் கீழுள்ள குழந்தைகள்; அத்துடன்
- மேற்போந்த வகுதிக்குரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகள்; ஆகியோர்கள் ஆவர்.

மேற்போந்த திரிபோஷ பயனாளிகளுக்கு முழுமையாக மாதமொன்றுக்குத் தேவைப்படும் திரிபோஷ வழங்கப்படுவதற்கு 1,392 மெற்றிக் தொன் திரிபோஷ மாதாந்தம் உற்பத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. 2010 செப்ரெம்பர் மாதம்வரை திரிபோஷ கம்பனியை அரசாங்கத்திற்கு உடைமையாக்கிக் கொள்வதற்கு முன்னர் மாதத்திற்கான திரிபோஷ உற்பத்தி 1,000 மெற்றிக் தொன்களாகும். 2010 செப்ரெம்பர் மாதம் கம்பனியானது அரசுடைமையாக்கப்பட்டவுடன் உற்பத்தியில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. நவீன இயந்திர சாதனங்களின் நிறுவுகை, ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு போன்றவை இந்த உற்பத்தி அதிகரிப்பிற்கான காரணங்களாகும். இதற்கமைவாக, 2011 நவெம்பர் மாதத்திலிருந்து

மாதமொன்றுக்கான உற்பத்தியை 1,300 மெற்றிக் தொன்களாக அதிகரித்துக் கொள்வதற்கு இயலுமானதோடு, இது முழுத்தேவையின் 93 சதவீதமாகும்.

நாட்டின் 928,000 கொண்ட மொத்த பயனாளிகளின் தேவையை நிறைவு செய்வதற்கு அதாவது, 100 சதவீதத்தினை அடைவதற்கு மேலும் தேவைப்படுவது 92 மெற்றிக் தொன்கள் மாத்திரமாகும். யுத்தம் முடிவடைந்துள்ளதன் காரணமாக அபிவிருத்தி அடைந்துவரும் பிரதேசங்களிலுள்ள பயனாளிகளைக் கணக்கெடுத்ததன் பின்னர் 2015 ஆம் ஆண்டில் பயளனாளிகளின் எண்ணிக்கை 1.3 மில்லியன்களெனக் கணக்கிடப்பட்டுள்ளதோடு, இதற்காக மாதமொன்றுக்கான உற்பத்தித் தேவையானது 1,512 மெற்றிக் தொன்களாகும். இந்த தேவையினை அடைவது தற்போதைய குறியிலக்காகும். அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் திரிபோஷ உற்பத்தித் தேவையின் 100 சதவீத தேவையினை அடைவதற்கு 2015 ஆம் ஆண்டளவில் 1 மில்லியன் கொண்ட மொத்த பயனாளிகளுக்குத் தேவையான 1,512 மெற்றிக் தொன் திரிபோஷ உற்பத்தி செய்வது மிக இலகுவான குறியிலக்காக அமைவது பின்வரும் மேலதிக விருத்திகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றமையினாலாகும்.

**குறியிலக்கினை அடைவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

திரிபோஷ உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு பொது திறைசேரியினால் நேரடியாக திரிபோஷக் கம்பனிக்கு 200 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது. இதில் 44 மில்லியன் ரூபா ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதோடு, இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டதன் பின்னர் திரிபோஷ உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர், 2015 ஆம் ஆண்டில் 1 மில்லியன் மொத்த பயனாளிகளுக்கும் திரிபோஷ வழங்க முடியும். முழுநாட்டினதும் திரிபோஷ பயனாளிகளுக்குத் தேவையான திரிபோஷ வழங்கப்பட்டதன் பின்னர் மேலதிகமாக உள்ள தொகையை உள்ளூர் சந்தைக்கு வழங்குவது கம்பனியின் அடுத்து வெற்றி குறியிலக்காகும்.

**நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சேவை வகுதிகள், பதவிகள் மற்றும் பதவியணி**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | **சிரேட்ட முகாமையாளர்கள்** | | | |
| | • | சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு) | 01 | |
| | • | சிரேட்ட முகாமையாளர் (மனித வளங்கள், சட்டம்) | 01 | 02 |
| 02. | **நடுத்தர மட்ட முகாமையாளர்கள்** | | | |
| | • | முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி சேவை) | 01 | |
| | • | முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு) | 01 | |
| | • | முகாமையாளர் (நிதி) | 01 | 03 |
| 03. | **கனிஷ்ட முகாமையாளர்கள்** | | | |
| | • | விநியோக உத்தியோகத்தர் | 01 | |
| | • | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | 01 | |
| | • | நிதி உத்தியோகத்தர் | 01 | |
| | • | வழங்கல் உத்தியோகத்தர் | 01 | |
| | • | பண்டகசாலை உத்தியோகத்தர் | 01 | |
| | • | உற்பத்தி உத்தியோகத்தர் | 01 | |
| | • | நிருவாக உத்தியோகத்தர் | 01 | |
| | • | களஞ்சியசாலை உத்தியோகத்தர் | 01 | |
| | • | நிதி உத்தியோகத்தர் | 01 | 09 |
| 04. | **முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம்)** | | | 03 |
| 05. | **முகாமைத்துவ உதவியாளர் (தொழினுட்பம் சாராத)** | | | 14 |
| 06. | **தொடக்கநிலை சேவைகள்** | | | |
| | **தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சி பெற்ற)** | | | |
| | • | சாரதி | 06 | |
| | • | மின் தொழினுட்பவியலர் | 03 | 09 |
| | **தொடக்கநிலை சேவைகள் (பகுதி தேர்ச்சி)** | | | |
| | • | கொதிகலன் தொழினுட்பவியலர் | 03 | |
| | • | பொருத்துநர்கள் | 03 | |
| | • | லேத் மெசின் இயக்குநர்கள் | 02 | |
| | • | இயந்திர இயக்குநர்கள் | 22 | |
| | • | தரப் பரிசோதகர்கள் | 07 | |
| | • | தீயணைப்பு உதவியாளர் | 01 | 38 |
| | **தொடக்கநிலை சேவைகள் (தேர்ச்சியற்ற)** | | | |
| | • | தோட்டக்காரர் | 02 | |
| | • | தொழிலாளர் / அலுவலக உதவியாளர் | 02 | |
| | • | பொது தொழிலாளர் | 111 | |
| | • | தொழிலாளர் மேற்பார்வையாளர் | 01 | 116 |
| | | | **மொத்தம்** | 194 |

## சேவைகளுக்கு அமைவாக எமது குழு செயற்படும் விதம்

- **உற்பத்தி தொழிற்சாலை**

(குழுவில் உள்ளோர் - 170)

| | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | சிரேட்ட முகாமையாளர் (தொழிற்பாடு) | 01 |
| 02. | முகாமையாளர் (பொறியியல் மற்றும் உற்பத்தி சேவை) | 01 |
| 03. | முகாமையாளர் (தரக்கட்டுப்பாடு) | 01 |
| 04. | முகாமையாளர் (உற்பத்தி ) | 01 |
| 05. | உற்பத்தி உத்தியோகத்தர் | 03 |
| 06. | களஞ்சியசாலை உத்தியோகத்தர் | 02 |
| 07. | விநியோக உத்தியோகத்தர் | 01 |
| 08. | முகாமைத்துவ உதவியாளர்கள் | 07 |
| 09. | மின்சார தொழினுட்பவியலர் | 03 |
| 10. | தீயணைப்பு உதவியாளர் | 01 |
| 11. | தரப் பரிசோதகர்கள் | 07 |
| 12. | இயந்திர இயக்குநர்கள் | 22 |
| 13. | லேத் மெசின் இயக்குநர்கள் | 02 |
| 14. | பொருத்துநர்கள் | 03 |
| 15. | கொதிகலன் தொழினுட்பவியலர் | 03 |
| 16. | பொது தொழிலாளர்கள் | 112 |
| | | **170** |

- **நிருவாக, கணக்கு மற்றும் ஏனைய கிளைகள்**

(குழுவில் உள்ளோர் - 24)

| | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | சிரேட்ட முகாமையாளர் (மனித வளங்கள், சட்டம்) | 01 |
| 02. | முகாமையாளர் (நிதி) | 01 |
| 03. | நிதி உத்தியோகத்தர் | 01 |
| 04. | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் | 01 |
| 05. | நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| 06. | வழங்கல் உத்தியோகத்தர் | 01 |
| 07. | முகாமைத்துவ உதவியாளர்கள் | 07 |
| 08. | சாரதிகள் | 06 |
| 09. | அலுவலக உதவியாளர்கள் | 02 |
| 10. | தோட்டக்காரர்கள் | 02 **24** |
| | | **194** |

**2015 ஆம் ஆண்டில் கேள்விச் செயல்முறையைப் பின்பற்றி பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் தொடர்பிலான விபரங்கள்**

**சோயா அவரை மற்றும் சோளம்**

01. விவசாயிகள் அமைப்பு,
மீகலாவ,
இல.367, 03 ஆம் மாடி,
டாம் வீதி, கொழும்பு - 12.

02. எஸ்.டீ.கே.யுனைடட் எக்ரிவென்சஸ்
பிறைவட் லிமிடட்
பண்டுலகம
அனுராதபுரம்.

03. ஒன்றிணைந்த விவசாயிகள் கம்பனி,
அம்பாறை,
இல,169,துட்டுகெமுனு வீதி, பேலியகொட.

04. கே.எஸ்.ரீ.எவர்கிறீன் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.583, சென்ட்யூட் மாவத்தை,
நிலவுல்ல,
கந்தானை.

05. சீ.ஐ.சீ.சீட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
இல.205 1/1,
டீ.ஆர்.விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு - 10.

01. **பால்மா**
மில்கோ கம்பனி,
இல.45, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட.

02. **விட்டமின்**
ஜே.கே.டிரேட்லிங் (பிறைவேட்) லிமிட்டெட்,
இல.44, தலவத்துகொட வீதி,
பிட்டகோட்டை.

03. **கனிமங்கள்**
விக்ரமரத்ன பிறைவேட் கம்பனி,
இல.231, டாம் வீதி,
கொழும்பு - 12.


04. **கிராவ்ட் பேப்பர்**
அப்துல்லா இன்டஸ்ட்ரீஸ் பெகேஜஸ் (பிறைவட்) லிமிடட்
இல,72 மகா வித்தியால வீதி,
கொழும்பு 13.

05. **பொலித்தீன்**
நிவ் ஜீவா இன்டஸ்ட்ரி (பிறைவட்) லிமிட்டெட்,
பொல்வத்தை
குண்டசாலை
கண்டி.


**2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை திரிபோஷ உற்பத்தி (மாஸ்டர் பக்கெட்டுகளில்)**

| மாதம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| சனவரி | 41,752 | 37,689 | 43,026 | 40,316 | 47,901 |
| பெப்ரவரி | 45,161 | 47,414 | 44,109 | 47,708 | 43,679 |
| மார்ச் | 48,028 | 47,198 | 44,701 | 56,917 | 53,206 |
| ஏப்ரல் | 37,573 | 30,336 | 22,018 | 38,492 | 42,176 |
| மே | 48,002 | 43,425 | 30,069 | 56,456 | 57,367 |
| யூன் | 37,860 | 45,936 | 33,370 | 51,654 | 53,393 |
| யூலை | 38,090 | 45,736 | 60,285 | 57,309 | 61,000 |
| ஆகஸ்ட் | 47,810 | 47,236 | 55,429 | 57,677 | 57,719 |
| செப்ரெம்பர் | 50,428 | 44,645 | 58,712 | 57,621 | 60,182 |
| ஒக்ரோபர் | 56,913 | 48,009 | 49,958 | 58,522 | 62,381 |
| நவெம்பர் | 51,026 | 15,308 | 42,348 | 56,324 | 60,908 |
| திசெம்பர் | 10,304 | 37,520 | 18,238 | 42,072 | 48,633 |
| மாஸ்டர் பெக்ஸ் | **512,947** | **490,452** | **502,263** | **621,068** | **648,545** |
| மெற்றிக் தொன் | 11,541 | 11,035 | 11,300 | 13,974 | 14,592 |


**2011 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)**




2012 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)





2013 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள் (மாஸ்டர் பக்கெட்டுகளில்)



**2014 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள்**




**2015 ஆம் ஆண்டின் வரைபட ரீதியிலான உற்பத்தி தரவுகள்**




மேற்போந்த தகவல்களுக்கு அமைவாக 40 வருடங்கள் கொண்ட உற்பத்தி வரலாற்றில் ஆகக்கூடிய வருடாந்த உற்பத்தியானது 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, அது 648,545 மாஸ்டர் பைக்கெற்றுக்களாகும்.

2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட குறியிலக்கு

தற்போது செயலிலுள்ள என்டர்சன் இயந்திரத்திற்குப் பதிலாக புதிய அன்டர்சன் இயந்திரமொன்று தாபிக்கப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் மேலதிக உற்பத்தியினை செய்ய இயலுமாவதோடு, இந்த மேலதிகத் தொகையை சந்தைப்படுத்துவது திரிபோஷ கம்பனி முகாமைத்துவத்தினதும் பதவியணியினரதும் குறிக்கோளாகும்.

மேலும் இந்த உற்பத்திகளை மேலும் வினைத்திறனுடன் பொதியிடுவதற்கு பொதியிடல் இயந்திரங்கள் 03 கொள்வனவு செய்வதும் மிகை உற்பத்தியினுடன் இணைந்த மற்றுமொரு இலக்காகும்.

2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் உற்பத்தியை பின்வரும் விதத்தில் அதிகரிப்பது நிறுவனத்தின் ஒரே எதிர்பார்ப்பாகும். அதன்போது பயனாளிகளின் தேவைக்கேற்ப விநியோகிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

| மாதம் | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|
| | மாஸ்டர் பக்கெட்டுகள் | பக்கெட்டுகள் | மாஸ்டர் பக்கெட்டுகள் | பக்கெட்டுகள் |
| சனவரி | 57,012 | 1,710,360 | 67,596 | 2,027,800 |
| பெப்ரவரி | 51,972 | 1,559,160 | 67,596 | 2,027,880 |
| மார்ச் | 60,036 | 1,801,080 | 70,476 | 2,114,280 |
| ஏப்ரல் | 57,348 | 1,720,440 | 53,556 | 1,606,680 |
| மே | 63,060 | 1,891,800 | 67,596 | 2,027,880 |
| யூன் | 60,036 | 1,801,080 | 61,476 | 1,844,280 |
| யூலை | 60,036 | 1,801,080 | 67,596 | 2,027,880 |
| ஆகஸ்ட் | 60,372 | 1,811,160 | 72,996 | 2,189,880 |
| செப்டம்பர் | 60,036 | 1,801,080 | 70,116 | 2,103,480 |
| ஒக்டோபர் | 62,724 | 1,881,720 | 70,476 | 2,114,280 |
| நவம்பர் | 60,372 | 1,811,160 | 66,876 | 2,006,280 |
| டிசம்பர் | 57,348 | 1,720,440 | 63,996 | 1,919,880 |
| **மொத்தம்** | **710,352** | **21,310,560** | **800,352** | **24,010,560** |

## தரவுகளும் தகவல்களும்

திரிபோஷா உற்பத்தி மற்றும் விநியோகம் போன்றவை தொடர்பிலான தரவுகளை உடனடியாகவும் இலகுவாகவும் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் மென்பொருள் (Software) தாபிக்கப்படுவது முக்கியமானதாகையினால் எதிர்காலத்தில் அது செய்யப்படவுள்ளது.

## உற்பத்தி மூலப்பொருட்களை மேலும் கொள்வனவு செய்தல்

உள்நாட்டு விவசாயிகளை மேலும் பாதுகாக்கும் நோக்கில் அவர்களுடைய உற்பத்திகளை விவசாய அமைப்புகளின் ஊடாக திரிபோஷ நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கமைவாக, மீகலாவ, அநுராதபுரம், அம்பாறை, மற்றும் ஹூருளுவெவ விவசாய அமைப்புகளின் ஊடாக சோயா அவரை மற்றும் சோள உற்பத்திகள் பெற்றுக் கொள்ளப்பட்டமையினால் இந்த விவசாய அமைப்புகளும் அது சார்ந்த சுமார் 8,000 மகாவலி மற்றும் பாரம்பரிய விவசாய குடும்பங்களும் நேரடியாக நிறுவனத்துடன் இணையும் சாத்தியம் கிடைக்கப்பெறும். இதற்காக பிராந்திய அபிவிருத்தி வங்கி, பிரதான வணிக வங்கிகள் மூலம் உரிய விவசாய அமைப்புகளுக்குத் தேவையான நிதி வசதிகள் வழங்கப்படும்.

## விநியோக செயற்பாடு

**திரிபோஷ தொழிற்சாலை (ஜா-எல)**



↓

**விநியோக நடவடிக்கைகள் (லொறி, புகையிரத சரக்குப் பெட்டிகள்)**








↓


பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள் → சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் → சுகாதார நிலையம் (கிளினிக்) → குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் →

பெருந்தோட்டம் →

சிறுவர் நிலையங்கள் →







திரிபோஷ பயனாளிகள்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் மூலம் திரிபோஷ உற்பத்தி செய்யப்பட்டு சுகாதார அமைச்சின் ஊடாக முறையாக விநியோகிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

திரிபோஷ விநியோக நிலையங்கள்

| மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம் | |
|---|---|
| 1. | மத்திய மாகாணம் |
| 2. | கிழக்கு மாகாணம் |
| 3. | வடமத்திய மாகாணம் |
| 4. | வடமேல் மாகாணம் |
| 5. | வட மாகாணம் |
| 6. | சப்பிரகமுவ மாகாணம் |
| 7. | தென் மாகாணம் |
| 8. | ஊவா மாகாணம் |
| 9. | மேல் மாகாணம் |
| | |

| பெருந்தோட்டம் | |
|---|---|
| 1. | ஹட்டன் |
| 2. | மாத்தளை |
| 3. | கேகாலை |
| 4. | கண்டி |
| 5. | களுத்துறை |
| 6. | நுவரெலியா |
| 7. | மாத்தறை |
| 8. | பதுளை |
| 9. | காலி |
| 10. | இரத்தினபுரி |

| பிற | |
|---|---|
| 1. | இராணுவ மருத்துவமனை |
| 2. | பொலிஸ் மருத்துவமனைகள் |
| 3. | முன்பள்ளிகள் |
| 4. | நகர சபைகள் |
| | நீர்கொழும்பு |
| | - கொழும்பு |
| | - மாத்தளை |
| | - காலி |
| | - கண்டி |
| | |

| சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் அதிகார பிரதேசம் | |
|---|---|
| 1. | அநுராதபுரம் |
| 2. | பத்தரமுல்லை |
| 3. | பதுளை |
| 4. | காலி |
| 5. | யாழ்ப்பாணம் |
| 6. | திருகோணமலை |
| 7. | குருநாகல் |
| 8. | இரத்தினபுரி |
| 9. | கேகாலை |
| 10. | கண்டி |
| | |
| | |
| | |

| பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம் | | | |
|---|---|---|---|
| 1. | அம்பாறை | 14. | கண்டி |
| 2. | அநுராதபுரம் | 15. | கேகாலை |
| 3. | பதுளை | 16. | கிளிநொச்சி |
| 4. | மட்டக்களப்பு | 17. | குருநாகல் |
| 5. | கொழும்பு | 18. | மாத்தளை |
| 6. | காலி | 19. | மாத்தறை |
| 7. | கம்பஹா | 20. | மன்னார் |
| 8. | அம்பாந்தோட்டை | 21. | மொனராகலை |
| 9. | யாழ்ப்பாணம் | 22. | நுவரெலியா |
| 10. | கல்முனை | 23. | பொலன்நறுவை |
| 11. | களுத்துறை | 24. | புத்தளம் |
| 12. | இரத்தினபுரி | 25. | வவுனியா |
| 13. | திருகோணமலை | | |

| சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அம்பாறை | 07 | 10. | கல்முனை | 13 | 19 | மாத்தறை | 16 |
| 2. | அநுராதபுரம் | 18 | 11. | களுத்துறை | 13 | 20 | மன்னார் | 03 |
| 3. | பதுளை | 15 | 12. | இரத்தினபுரி | 17 | 21 | மொனராகலை | 11 |
| 4. | மட்டக்களப்பு | 13 | 13. | திருகோணமலை | 10 | 22 | நுவரெலிய | 11 |
| 5. | கொழும்பு | 11 | 14. | கண்டி | 21 | 23 | பொலன்னறுவை | 07 |
| 6. | காலி | 19 | 15. | கேகாலை | 11 | 24 | புத்தளம் | 11 |
| 7. | கம்பஹா | 16 | 16. | கிளிநொச்சி | 04 | 25 | வவுனியா | 04 |
| 8. | அம்பாந்தோட்டை | 12 | 17 | குருநாகல் | 23 | | | |
| 9. | யாழ்ப்பாணம் | 11 | 18 | மாத்தளை | 12 | | | |

## 2015 ஆம் ஆண்டு திரிபோஷா விநியோக தகவல்கள்

| பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அதிகார பிரதேசம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மாதத்திற்கு ஒதுக்கப்படும் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தாய்மார்களுக்கு | குழந்தைகளுக்கு | மொத்தம் |
| அம்பாறை | 26,542 | 574 | 1,190 | 1,764 |
| அநுராதபுரம் | 56,410 | 1,251 | 2,513 | 3,764 |
| பதுளை | 41,461 | 927 | 1,837 | 2,764 |
| மட்டக்களப்பு | 43,405 | 960 | 1,932 | 2,892 |
| கொழும்பு வைத்தியசாலை | 4,848 | 68 | 256 | 324 |
| கொழும்பு மாநகர சபை | 9,240 | 221 | 405 | 626 |
| கொழும்பு (தெற்கு) | 44,513 | 975 | 1,991 | 2,966 |
| காலி | 47,365 | 1,048 | 2,109 | 3,157 |
| கம்பஹா | 51,159 | 1,158 | 2,253 | 3,411 |
| அம்பாந்தோட்டை | 34,758 | 776 | 1,542 | 2,318 |
| யாழ்ப்பாணம் | 31,010 | 689 | 1,408 | 2,097 |
| கல்முனை | 37,706 | 835 | 1,678 | 2,513 |
| களுத்துறை | 34,317 | 770 | 1,520 | 2,290 |
| கண்டி | 59,458 | 1,320 | 2,646 | 3,966 |
| கேகாலை | 30,288 | 1,031 | 990 | 2,021 |
| கிளிநொச்சி | 7,719 | 172 | 342 | 514 |
| குருநாகல் | 66,798 | 1,471 | 2,983 | 4,454 |
| மன்னார் | 7,398 | 163 | 330 | 493 |
| மாத்தளை | 31,158 | 623 | 1,460 | 2,083 |
| மாத்தறை | 50,695 | 1,117 | 2,264 | 3,381 |
| மொனராகலை | 29,517 | 657 | 1,310 | 1,967 |
| நுவரெலிய | 26,798 | 540 | 1,245 | 1,785 |

| | | | | |
|---|---|---|---|---|
| பொலன்னறுவை | 32,367 | 625 | 1,534 | 2,159 |
| புத்தளம் | 27,857 | 661 | 1,197 | 1,858 |
| இரத்தினபுரி | 42,555 | 957 | 1,881 | 2,838 |
| திருகோணமலை | 40,884 | 905 | 1,819 | 2,724 |
| வவுனியா | 8,290 | 186 | 368 | 554 |
| முல்லைத்தீவு | 6,335 | 141 | 281 | 422 |
| **மொத்தம்** | **930,851** | **20,821** | **41,284** | **62,105** |

| சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் நிலையம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மாதத்திற்கு ஒதுக்கப்படும் அளவு - குழந்தைகளுக்கு |
|---|---|---|
| 09 | 22,692 | 6,051 |
| மொத்தம் | **22,692** | **6,051** |

| பெருந்தோட்ட பிரதேசம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மாதத்திற்கு ஒதுக்கப்படும் அளவு | | |
|---|---|---|---|---|
| | | தாய்மார்களுக்கு | குழந்தைகளுக்கு | மொத்தம் |
| ஹட்டன் | 10,655 | 689 | 1,435 | 2,124 |
| மாத்தளை | 2,888 | 178 | 400 | 578 |
| கேகாலை | 4,387 | 257 | 620 | 877 |
| கண்டி | 5,334 | 332 | 735 | 1,067 |
| களுத்துறை | 2,559 | 166 | 346 | 512 |
| நுவரெலியா | 11,595 | 756 | 1,563 | 2,319 |
| மாத்தறை | 1,077 | 70 | 145 | 215 |
| பதுளை | 10,340 | 703 | 1,365 | 2,068 |
| காலி | 1,110 | 69 | 153 | 222 |
| இரத்தினபுரி | 4,743 | 310 | 638 | 948 |
| **மொத்தம்** | **54,688** | **3,530** | **7,400** | **10,930** |

**2015 ஆம் ஆண்டின் திரிபோஷ விநியோக நிலையங்களின் எண்ணிக்கையும் பயனாளிகளின் எண்ணிக்கையும்**

| | நிலையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவுகள் 26 சார்பில் | 740 | 930,851 |
| பெருந்தோட்டம் | 447 | 54,688 |
| சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் திணைக்களத்தின் சிறுவர் இல்லங்கள் | 09 | 22,692 |
| **மொத்தம்** | 1,196 | 1,008,231 |

### இறுதி குறியிலக்கு

இந்த தேவைகளை பூர்த்தி செய்து தேவையான விருத்திகள் எதிர்வரும் குறுகிய காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படுவதோடு 10 இலட்சத்திற்குக் கிட்டிய மொத்த பயனாளிகளுக்கு குறைவிலாது திரிபோஷ வழங்குவதற்கு 100 சதவீத குறியிலக்கினை அடைவது இறுதி குறியிலக்காகும். அதேபோன்று மேலதிக உற்பத்திளை எதிர்பார்க்கப்படுவதோடு இந்த உற்பத்தியை புதிய வடிவத்தில் சந்தையில் அறிமுகப்படுத்தி சந்தை குறியிலக்கினை வெற்றிகொள்வது மற்றுமொரு குறியிலக்காகும். இதற்கமைவாக நாட்டின் பயனாளிகளின் தேவைக்கேற்ற உற்பத்தி மட்டத்தை இவ்வாறு விருத்தி செய்து சிறந்த சேவை நிலையினை பேணுவதுடன் உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தி இலாபமீட்டும் அரசாங்க கம்பனியொன்றாக திகழ்வது வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ கம்பனியின் எதிர்பார்ப்பாகும்.

### 2015 ஆம் ஆண்டினுள் அடைந்த வெற்றிகளும் முகம் கொடுக்க நேர்ந்த பிரச்சினைகளும்

2015 ஆம் ஆண்டினுள் அடைந்த வெற்றிகளாவது போஷாக்கின்மையை நாட்டிலிருந்து இல்லாதொழிக்கும் எமது அடிப்படை நோக்கத்தினை வெற்றிகொள்ள முடிந்தமையாகும். அதாவது, திரிபோஷ விநியோகத்தின் மூலம் ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது போஷாக்கின்மை நிலைமையானது குறைந்துள்ளமையாகும். உதாரணமாக மொனறாகலை மாவட்டத்தின் போஷாக்கின்மை தொடர்பிலான நூற்றுவீதமானது குறைந்துள்ளதென பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தின் ஊடாக எமக்கு அறிவிக்கப்பட்டது.

### சிறப்பாக செயற்படுவதற்கான பிரேரிப்புகள்

1. முறையான விநியோக நடவடிக்கை முறையினைப் பின்பற்றுவதற்கான வசதிகருதி எமது நிறுவனத்திற்கு லொறியொன்றை கொள்வனவு செய்வதும்;


2. திரிபோஷ விநியோகிக்கும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கு கண்காணிப்புக் குழுவொன்று தாபிப்பதும்; மிகமுக்கியமானதாகும்.

**நாம் 2015 ஆம் ஆண்டில் பெற்ற உற்பத்தி வெற்றி**

**திரிபோஷ உற்பத்தி வரலாற்றில் ஆகக்கூடிய உற்பத்தியினை பெறுவதற்கு எமக்கு இயலுமானது**

**வெற்றியின் பின்னணி**

- குழுவாக இணைந்து செயலாற்றியமை
- நவீன இயந்திரங்கள் புதிதாக பயன்படுத்தியமை
- வேலை தொடர்பிலான எண்ணத்தை அதிகரித்தமை



எமது அடுத்த குறியிலக்கு சந்தையை வென்றெடுப்பதாகும்
நாங்கள் வெற்றி கொள்வோம்

## நன்றி

எல்லோரையும் ஊக்குவித்து தேவையான அறிவுறுத்தல்களையும் அனுசரணையையும் வழங்கியமை தொடர்பில் சுகாதார அமைச்சர் மாண்புமிகு ராஜித்த சேனரத்ன அவர்களுக்கும் பிரதி சுகாதார அமைச்சர் மாண்புமிகு பைசல் காசிம் அவர்களுக்கும் எம்மை வழிப்படுத்தி எமக்கு தேவையான ஆலோசனைகளையும் அனுமதிகளையும் காலம் தாழ்த்தாது வழங்கிய சுகாதார அமைச்சின் செயலாளர் திரு அநுர ஜயவிக்கிரம அவர்களுக்கும் மற்றும் வருடம் தோறும் தேவையான ஒதுக்கீடுகளை எமக்கு வழங்கிய நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொது திறைசேரியின் செயலாளர் திரு. ஆர்.எச்.எஸ்.சமரதுங்க அவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் அங்கம் வகித்த பணிப்பாளர் சபையின் அனைவரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பு எம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. அத்துடன் எமது வழங்குநர்கள் உட்பட வெளிவாரியாக எமக்குச் சேவை வழங்கும் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

எமது நிறுவனத்தில் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் உள்ள பதவிகளில் திருப்திகரமாக சேவைபுரியும் பதவியணியொன்று காணக்கூடியதாகவுள்ளமை பெருமகிழ்ச்சியாகும். நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்பு மெச்சப்படுதல் வேண்டும். இறுதியாக திரிபோஷ நிறுவனத்திற்கென கட்டியெழுப்பப்பட்ட நற்பெயரைப் பாதுகாத்து எந்நேரமும் உழைக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷ கம்பனியின் மொத்த பதவியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கபில ரத்னசிங்க என்ட் கம்பனி**
**(பட்டயக் கணக்காளர்கள்)**

83/1/2, சுபத்திரராம வீதி,
கங்கொடவில, நுகேகொட, இலங்கை.
தொ.பே. : +94 11 2822 164
பெக்ஸ் : +94 11 3103 870
கையடக்க தொ.பே. : +94 71 6840 945
மின்னஞ்சல் : krc@krathnasinghe.com
இணையம் : www.krathnasinghe.com

## சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை

### வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியின் பங்குதாரர்களுக்கு

2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான முழுமொத்த வருமானக் கூற்று மற்றும் செலவினக் கணக்கு, உரிமை முதலிலான மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புகளின் பொழிப்பு ஆகியவற்றை உள்ளடக்கும் வரையறுக்கப்பட்ட ரீ லங்கா திரிபோஷா கம்பனியின் இணைந்த நிதிக் கூற்றுக்களை நாம் கணக்காய்வு செய்துள்ளோம்.

### நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான முன்வைப்புக்கு முகாமைகத்துவ சபை (முழு சபையும்) பொறுப்பாகும். மோசடியாகவோ அன்றி வழு காரணமாகவோ ஏற்படும் பிரதான தவறான கூற்றிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான முன்வைப்புடன் தொடர்புபட்ட உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல், அமுல்படுத்தல் மற்றும் பேணுதல்; பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவுசெய்தல் மற்றும் பிரயோகித்தல்; மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்தல் ஆகியவற்றை இப் பொறுப்பு உள்ளடக்குகின்றது.

### கணக்காய்வாளர்களின் பொறுப்பு

எமது பொறுப்பானது எமது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துவதே ஆகும். நாம் எமது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க நடாத்தியுள்ளோம். நிதிக் கூற்றுக்களானவை பிரதான தவறான கூற்றிலிருந்து விடுபட்டனவா என்பது பற்றிய நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நாம் கணக்காய்வினைத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும் என்பதை அந் நியமங்கள் தேவைப்படுத்துகின்றன.

நிதிக் கூற்றுக்களிலான தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு ஆதாரமான சான்றினை ஒரு பரிசோதனை அடிப்படையில் பரீட்சித்துப் பார்த்தலை ஒரு கணக்காய்வானது உள்ளடக்குகின்றது. மோசடியாகவோ அன்றி வழு காரணமாகவோ ஏற்படும் பிரதான தவறான கூற்று ஆபத்தான மதிப்பீட்டுக்கு உட்படுகின்றது. அந்த ஆபத்தான மதிப்பீட்டை செய்கின்றபோது நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்புடைய உள்ளக கட்டுப்பாடு கணக்காய்வாளரினால் கருத்திறகொள்ளப்படுவதோடு அதன் மூலம் சந்தரப்பத்திற்கேற்ப கணக்காய்வு முறைகள் திட்டமிடுவதற்காக உண்மையான மற்றும் நியாயமான கருத்தொன்றை முன்வைக்க வேண்டியிருப்பினும் நிறுவனத்தின் உள்ளக உற்பத்தித்திறன் பற்றி கருத்து தெரிவிப்பது நோக்கமன்று. முகாமையினால் பாவிக்கப்படும் கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் முக்கியமான மதிப்பீடுகளினை மதிப்பிடுதலையும் அதேவேளை நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பினையும் மதிப்பிடுதலையுங்கூட ஒரு கணக்காய்வு உள்ளடக்குகின்றது.

எமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை, எமது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமாகவிருந்த சகல தகவல்களையும் விளக்கங்களையும் நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். ஆதலால் எமது கணக்காய்வானது எமது தகைமை வாய்ந்த அபிப்பிராயத்திற்கான நியாயமான ஓர் அடிப்படையினை வழங்குகின்றது என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

## அபிப்பிராயம்

2015 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இக் கம்பனியினது அலுவல்கள் நிலைப்பாட்டின் உண்மையானதும் நியாயமானதுமான பார்வையினையும், அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான அதன் பற்றாக்குறைகள் மற்றும் காசுப் பாய்ச்சல்கள் ஆகியவற்றையும் நிதிக் கூற்றுக்கள் தருகின்றன.

## ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றோம்.

(அ) கருத்துக்களை முன்வைக்கும் அடிப்படை மற்றும் கணக்காய்வு விடய நோக்கெல்லை உட்பட வரையறைகள்.

(ஆ) எமது கருத்துக்கு அமைவாக -

- கணக்காய்வுக்குத் தேவைப்பட்ட சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் எம்மால் பெறப்பட்டதோடு வெளிவாரி பரிசோதனைகளின் மூலம் தெரிய வருவது கம்பனி முறையாக கணக்குகளை பேணி வந்துள்ளமை.
- கம்பனியின் நிதிக்கூற்று மூலம் 2015 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த கம்பனியின் நிதி நிலைமை மற்றும் இலங்கை கணக்கிடல் தரங்கள் என்பவற்றுக்கு அமைவாக இறுதி ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை உட்பட காசு பாய்ச்சல் நிலைமைப் பற்றி உண்மையானதும் சாதாரணமான வெளிப்படுத்தலைக் காட்டுகின்றமை.
- கம்பனியின் நிதிக் கூற்றானது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையுடன் ஒத்திசைகின்றமை.

**பட்டயக் கணக்காளர்கள்**

**கொழும்பு**

**திகதி**: 2017 **ஏப்ரல் மாதம்** 07 **ஆம் திகதி.**

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## வருமான மற்றும் செலவினக் கூற்று

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | குறிப்புகள் | 2015.12.31 ரூபா சதம் | 2014.12.31 ரூபா சதம் |
|---|---|---|---|
| ஆண்டுக் காலத்தில் செய்யப்பட்ட செலவின மீளளிப்பு | 02 | 1,776,421,902.86 | 1,776,560,232 |
| கழிப்பனவு:உற்பத்திக் கிரயம் | 03 | (1,793,195,367.32) | (1,604,546,992) |
| | | (16,773,464.46) | 172,013,239 |
| சேர்ப்பனவு:ஏனைய வருமானம் | 04 | 25,779,714.43 | 21,087,872 |
| | | 9,006,249.97 | 193,101,111 |
| கழிப்பனவு: செலவினங்கள் | | | |
| நிர்வாகச் செலவினங்கள் | | (36,103,900.98) | (36,360,371) |
| விநியோகச் செலவினம் | | (11,119,781.08) | (7,232,959) |
| நிதி மற்றும் ஏனைய செலவினங்கள் | | (3,272,031.49) | (1,311,290) |
| | | (50,495,713.55) | (44,904,620) |
| ஆண்டுக்கான செலவிலுங் கூடிய வருமானம் | 05 | (41,489,463.58) | 148,196,491 |
| ஏனைய விஸ்தீரன வருமானம் | | | |
| ஓய்வூதிய நலன்களை மாற்றியமைத்தமையினால் | | - | 411,928 |
| ஆண்டுக்கான முழுமொத்த விஸ்தீரன வருமானம் | | (41,489,463.58) | 148,608,419 |

இந்த நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 6 தொடக்கம் 21 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த முழுமொத்த வருமானக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது.

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## நிதி நிலமைக் கூற்று

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று

| | குறிப்புகள் | 2015.12.31 ரூபா சதம் | 2014.12.31 ரூபா சதம் |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறை சாராத சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 06 | 435,918,034.29 | 423,481,345 |
| புலப்படாத சொத்துக்கள் | | 661,187.57 | - |
| | | 436,579,221.86 | 423,481,345 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் | 07 | 228,273,117.84 | 285,308,428 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 08 | 134,547,130.68 | 43,877,617 |
| முதலீடுகள் | 09 | 90,251,730.77 | 60,200,275 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 10 | 53,922,992.19 | 7,461,286 |
| | | 506,994,971.48 | 396,847,606 |
| மொத்தச் சொத்துக்கள் | | 943,574,193.34 | 820,328,950 |
| **பங்குரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்குகள் | | | |
| மூலதன ஒதுக்கு | 12 | 307,575,083.51 | 136,873,127 |
| மீள் விலைமதிப்பு ஒதுக்குகள் | 13 | 307,170,027.56 | 307,170,028 |
| செலவிலும் கூடிய திரண்ட வருமானம் | | 261,223,489.14 | 302,676,083 |
| மொத்த பங்குரிமை | | 875,968,600.21 | 746,719,238 |
| நடைமுறை சாராத பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | 14 | 29,593,685.00 | 28,130,680 |
| மருத்துவ நிதியம் | 15 | 241,489.92 | 141,164 |
| | | 29,835,174.92 | 28,271,844 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள் | 16 | 37,770,418.21 | 45,337,868 |
| | | 37,770,418.21 | 45,337,868 |
| மொத்த பங்குரிமையும் பொறுப்புக்களும் | | 943,574,193.34 | 820,328,950 |

இந் நிதிக் கூற்றுக்களின் முக்கிய பகுதி ஒன்றினை உருவாக்கும் 6 தொடக்கம் 20 வரையிலான பக்கங்களில் தோன்றும் இந் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் இணைந்து மேற்போந்த நிதி நிலமைக் கூற்றானது வாசிக்கப்படவுள்ளது

இந் நிதி நிலமைக் கூற்றுக்களானவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

……………………..

நிதித் தலைவர்

இந் நிதி நிலமைக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னளிப்பிற்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.

சபைக்காகவும் சபையின் சார்பிலும் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது

…………………… ………………….

தலைவர் பணிப்பாளர்

ஜா எல, கப்புவத்த

திகதி: 2017 ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## பங்குரிமை மாற்றக் கூற்று

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | குறிப்பு | மூலதன ஒதுக்குகள் ரூபா சதம் | மீள் விலைமதிப்பு ஒதுக்குகள் ரூபா சதம் | செலவிலும் கூடிய திரண்ட வருமானம் ரூபா சதம் | மொத்தம் ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| 2014.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | 152,382,926.66 | 307,170,027.56 | 154,060,207.30 | **613,613,161.52** |
| சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை | | 7,913,121.28 | - | - | **7,913,121.28** |
| மூலதன ஒதுக்குகளுக்கு மாற்றீடு செய்தல் | | 462,000.00 | - | - | **462,000.00** |
| பெறுமானத் தேய்வு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை | 17 | (23,884,920.47) | - | - | **(23,884,920.47)** |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | | - | - | 7,457.01 | **7,457.01** |
| 2014 செலவிலும் கூடிய வருமானம் | | - | - | 148,196,491.09 | **148,196,491.09** |
| 2014 வேறு விஸ்தீரண வருமானங்கள் | | - | - | 411,927.50 | **411,927.50** |
| 2014.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | **136,873,127.47** | **307,170,027.56** | **302,676,082.90** | **746,719,237.93** |
| 2015.01.01 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | 136,873,127.47 | 307,170,027.56 | 302,676,082.90 | **746,719,237.93** |
| மூலதனக் கொடை | | 197,517,198.54 | - | - | **197,517,198.54** |
| பெறுமானத் தேய்வு - சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனச் சொத்துக் கொடை | 17 | (26,345,242.48) | - | - | **(26,345,242.48)** |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | 18 | (470,000.00) | - | 36,869.82 | **(433,130.18)** |
| 2015 செலவிலும் கூடிய வருமானம் | | - | - | (41,489,463.58) | **(41,489,463.58)** |
| 2015.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு மீதி | | **307,575,083.53** | **307,170,027.56** | **261,223,489.14** | **875,968,600.23** |

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## காசுப் பாய்ச்சற் கூற்று

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா சதம் |
|---|---|---|
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| ஆண்டுக்கான செலவிலும் கூடிய வருமானம் | **(41,489,464)** | 148,608,419 |
| சீராக்கங்கள் | | |
| வட்டி வருமானம் | **(3,599,383)** | |
| ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடு | **2,413,806** | (411,928) |
| முன்னைய ஆண்டு சீராக்கங்கள் | **506,870** | |
| மருத்துவப் பங்களிப்புக்கான ஏற்பாடு | **173,968** | 190,158 |
| தேய்மானம் | **26,345,242** | |
| | **25,840,504** | (221,770) |
| தொழிற்படு மூலதனத்திற்கான மாற்றங்களின் முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | **(15,648,960)** | 148,386,649 |
| தொழிற்படு மூலதனத்திலான மாற்றங்கள் | | |
| கடன்படுனர் மற்றும் ஏனைய வருமதிகளிலான அதிகரிப்பு /(குறைவு) | **(90,669,514)** | (10,146,585) |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளிலான அதிகரிப்பு /(குறைவு) | **(7,567,450)** | 23,096,936 |
| இருப்புக்களில் அதிகரிப்பு /(குறைவு) | **57,035,310** | (156,589,836) |
| | **(41,201,653)** | (143,639,484) |
| பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு முன்னரான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | **(56,850,614)** | 4,747,165 |
| கழிப்பனவு: | | |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | **(950,801)** | (1,543,740) |
| மருத்துவ நன்மைக் கொடுப்பனவு | **(73,642)** | (111,789) |
| வரிக்குப் பின்னரான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | **(57,875,057)** | 3,091,636 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்ளல் செய்தல் | **(39,913,120)** | (7,913,121) |
| திறைசேரி உண்டியல் மீளப்பெறல் | **60,000,000** | - |
| காசாக வட்டி பெறப்படல் | **3,547,927** | - |
| திறைசேரி உண்டியல் கொள்ளல் செய்தல் | **(90,000,000)** | - |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | **(66,365,193)** | (7,913,121) |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| சுகாதார அமைச்சிடமிருந்தான மூலதனக் கொடை | **170,701,956** | 8,375,121 |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | **170,701,956** | 8,375,121 |
| காசும் காசுக்குச் சமமான விடயங்களிலான மாற்றங்கள் | **46,461,707** | 3,553,636 |
| முன்கொண்டு வந்த காசும் காசுக்குச் சமமான விடயங்களும் | **7,461,286** | 3,907,650 |
| முன்கொண்டு சென்ற காசும் காசுக்குச் சமமான விடயங்களும் | **53,922,992** | 7,461,286 |
| நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட்ட காசும் காசுக்குச் சமமான விடயங்களின் பகுப்பாய்வு | | |
| இலங்கை வங்கி - ஜா எல -71324617 | **53,922,992** | 7,461,286 |
| | **53,922,992** | 7,461,286 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது

1. **முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

1.1.1 **அறிக்கையிடும் நிறுவனம்**

வரையறுக்கப்பட்ட ශ්‍රී லங்கா திரிபோஷா கம்பனியானது சுகாதார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் முழுமையாக அரசுடமையான கம்பனி ஒன்றாக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு தாபிக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தளமும் த.பெ. இல. 17, கப்புவத்தை, ஜா எல, இலங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

1.1.2 **பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைத் தன்மை**

சுகாதார அமைச்சின் "திரிபோஷ விநியோக நிகழ்ச்சித் திட்டம் சார்பில் "திரிபோஷ உற்பத்தி செய்யும் ஒரே கம்பனி இந்தக் கம்பனியாகும்.

இந்த கம்பனியின் ஏனைய பிரதான செயற்பாடுகள் பின்வருவனவாகும்:

- இலங்கையில் தாய், சேய் போசாக்கின்மையைக் குறைக்கும் பொருட்டு இலங்கையின் ஊட்டச்சத்துமிக்க குறைநிரப்பு உணவு உற்பத்தியான "திரிபோஷ வினது மேம்பாடு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு உதவுதல்.
- சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக திரிபோஷ உற்பத்திக்கான மூலப் பொருட்களை வழங்கும் உள்நாட்டு விவசாயிகளுக்கான வருமான பிறப்பாக்க வழியினை ஊக்கப்படுத்தல்.
- அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் வேறு ஏதேனும் வடிவத்திலான ஊட்டச்சத்துமிக்க கலக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கு நிலவும் சந்தை வாய்ப்பை குறைத்தல்.
- திரிபோஷவின் வருடாந்த தேவைப்பாட்டினை மதிப்பிடுதல் மற்றும் வழங்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை எடுத்தல்.

1.1.3 **பணிப்பாளர் சபை**

1. திரு. எம்.டி. பந்துசேன (தலைவர்)
2. வைத்தியர் (திரு) பாலித குணரத்ன மஹீபால
3. வைத்தியர் (திருமதி) ஷாந்தி குணவர்த்தன
4. திருமதி எச்.எம். தேஜா ஹேரத்
5. திருமதி ஏ.ஆர். அஹமட்
6. வைத்தியர் தமயந்தி ஹப்புகொட
7. திரு பீ.பி. சிந்தக்க குலரத்ன
8. திரு எஸ்.ஆர். ராஜபக்ஷ (அவதானிப்பாளர்)

**சபைச் செயலாளர்**

திருமதி தனுஜா பிரியதர்ஷனி அல்விஸ்

1.1.4 **கணக்காய்வாளர்கள்**

கபில ரத்னசிங்க என்ட் கம்பனி
(பட்டயக் கணக்காளர்கள்)
83/1/2, சுபத்திராம வீதி, கங்கொடவில, நுகேகொட

1.1.5 **வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி

1.1.6 **வெளியீட்டிற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி**

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியின் நிதிக் கூற்றுக்களானவை 2017 ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கிணங்க வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டது.

1.1.7 **தயாரிப்பிற்கான அடிப்படை**

**(அ) ஒத்திசைவுக் கூற்று**

வருமானக் கூற்று, முழுமொத்த வருமான மற்றும் செலவினக் கூற்று, நிதி நிலமைக் கூற்று, உரிமை முதலிலான மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று ஆகியவற்றினை உள்ளடக்கும் நிதிக் கூற்றுக்களானவை கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் சேர்த்து ("நிதிக் கூற்றுக்கள்) இலங்கை பட்டயக் கணக்காளர் கம்பனியினால் (CA SRI LANKA) வெளியிடப்பட்டவாறான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் (SLFRS/LKAS) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாட்டுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**(ஆ) அளவீட்டிற்கான அடிப்படை**

உரிய குறிப்புகளின் கீழ் உண்மைப் பெறுமதி குறித்து பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படும் இடங்கள் தவிர வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**(இ) ஒப்பீட்டுத் தகவல்கள்**

அளவு, எடுத்துரைப்பு மற்றும் விவரிப்பு சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலான ஒப்பீட்டுத் தகவல்களானவை, நிகழ்கால நிதிக் கூற்றுக்களின் புரிந்துகொள்ளலை முன்னேற்றும் பொருட்டும் இடைக்கால ஒப்பீட்டுத் தன்மையினை மேம்படுத்தும் பொருட்டும் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட சகல தொகைகளுக்குமான முன்னைய காலப்பகுதி தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கீழே விதித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளானவை, வேறு வகையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலொழிய, இந் நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட சகல காலப்பகுதிக்கும் ஒரே மாதிரியாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களின் முன்னளிப்பு அல்லது விடய உருப்படிகளின் வகைப்பாடானது திருத்தப்பட்டிருக்கும் பொழுது சிறந்த முன்னளிப்பினை வழங்கும் பொருட்டு நிகழ்கால ஆண்டுடன் ஒத்திசைவதற்கென ஒப்பீட்டுத் தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### (ஈ) நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்பும்

இக் கம்பனியின் நாணயத் தொழிற்பாடும் முன்னளிப்புமாகவுள்ள இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்ட சகல நிதித் தகவல்களும், வேறு வகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, கிட்டிய ஆயிரத்துக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

### (உ) அடிப்படை மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்வுகளைப் பயன்படுத்தல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பும் முன்வைப்பும் ஆனது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினையும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கும் தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றைச் செய்வதற்கு முகாமையினைத் தேவைப்படுத்துகின்றது.

மதிப்பீடுகள் மற்றும் கீழுள்ள எடுகோள்கள் என்பன தொடர்ந்து செல்லும் ஓர் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்களானவை, அத் திருத்தமானது குறித்த காலப்பகுதியினை மாத்திரம் பாதித்தால் இம் மதிப்பீடானது திருத்தப்படும் காலப்பகுதியில் அல்லது திருத்தக் காலப்பகுதியிலும் அத்துடன் அத் திருத்தமானது நிகழ்காலப்பகுதியினையும் எதிர்காலப்பகுதியினையும் பாதித்தால் எதிர்காலத்திலும் இனங்காணப்பட்டுள்ளன.

### (ஊ) நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நிலமை

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நடவடிக்கை என்ற ரீதியில் கம்பனியை தொடர்ந்தும் பேணுவதற்கு அதற்குள்ள ஆற்றல் தொடர்பில் பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை செய்துள்ளது. தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தேவையான அளவு வளங்கள் கம்பனியிடம் உள்ளதாக சபை திருப்தியடைந்துள்ளது. அதற்கிணங்க, கம்பனியை செயற்பாட்டு நிலமையில் பேணும் உத்தேசத்துடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் பேணிவருவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## 1.2 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பு அடிப்படைகளும்

### 1.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

### (அ) சொத்தினை இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உருப்படிகளானவை திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் அல்லது உண்மைப் பெறுமதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய சகல உருப்படிகளும் ஆரம்பத்தில் திரண்ட தேய்வு மற்றும் ஏதேனும் குறைவுறும் நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. சொத்து ஒன்றின் முக்கியமான கூறுகளனைவை வெவ்வேறாக இனங்காணப்பட்டு

தேய்விடப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் முக்கியமான பகுதிகளானவை கால இடைவெளிகளில் பதிலீடு செய்வதற்கு தேவைப்படுத்தப்படும் போது நிறுவனமானது பதிலீடு செய்யப்பட்ட பகுதியினை இனங்காணலிலிருந்து நீக்குவதுடன் புதிய பகுதியினை அதன் சொந்த இணைந்த பயன்தரு ஆயுட்காலம் மற்றும் தேய்வு ஆகியவற்றுடன் சேர்த்து இனங்காண்கின்றது. ஏனைய சகல திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகளும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

**(ஆ) கிரயம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் கிரயமானது அதன் கொள்வனவு விலையினையும் மற்றும் அதன் உத்தேச பாவனைக்காக தொழிற்படு நிலையில் அச் சொத்தினைக் கொண்டுவருவதற்கு நேரடியாக விளைந்த ஏதேனும் கிரயத்தினையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் உழைக்கும் ஆற்றலைப் பேணுவதற்கு அல்லது அதிகரிப்பதற்கென நிரந்த அடிப்படையில் சொத்துக்களை கொள்ளல் செய்தல், விஸ்தரித்தல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக உறப்படும் அடுத்துவந்த செலவினமானது மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளது.

பிரதான பரிசோதிப்பு மற்றும் பிரதான திருத்தச் செலவினம் உள்ளடங்கலாக, வெவ்வேறாக கணக்கிடப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றின் கூறு ஒன்றினை பதிலீடு செய்வதற்கு உறப்படும் செலவினமானது மூலதனமாகக் கருதப்படும். அடுத்துவந்த ஏனைய செலவினமானது, அப் பகுதிக்குள் இணைந்த எதிர்கால பொருளாதார நன்மைகளானவை கம்பனிக்கு ஏற்படுவதுடன் அதன் கிரயமானது நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால் மாத்திரமே மூலதனமாகக் கருதப்படும்.

**(இ) தேய்வு**

அத்தகைய சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கும் பொருட்டு வருடம் ஒன்றுக்கு பின்வரும் வீதங்களில் நேர்கோட்டு (Straight - Line basis) அடிப்படையில் மூலதன ஒதுக்கிற்கு தேய்வானது சாட்டுதல் செய்யப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 20 வருடங்களுக்கு மேல் |
| பொறித்தொகுதியும் இயந்திர சாதனமும் | 10 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்களுக்கு மேல் |
| உபகரணம் மற்றும் கருவிகள் | 05 வருடங்களுக்கு மேல் |
| ஆய்வுகூட உபகரணம் | 10 வருடங்களுக்கு மேல் |
| விவசாய உபகரணம் | 10 வருடங்களுக்கு மேல் |
| மின்சார வேலைகள் | 05 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக உபகரணம் | 10 வருடங்களுக்கு மேல் |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்களுக்கு மேல் |

(ஈ) **இனங்கண்ட சொத்தினை நீக்குதல்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் உருப்படி ஒன்றானது, கையுதிர்ப்பின் பேரில் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எவையும் எதிர்பார்க்கப்படாத போது, இனங்காணலிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்துக்களின் நீக்கம் தொடர்பான ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது, அச் சொத்தானது இனங்காணலிலிருந்து நீக்கப்படும் ஆண்டிலுள்ள விஸ்தீரண வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

1.2.2 **நடைபெறும் வேலை**

மூலதன நடைபெறும் வேலையானது கிரயத்தில் எடுத்துரைக்கப்படும். மூலதனமாக்கலினை எதிர்பார்த்து கட்டடங்களின் நிர்மாணிப்பில் நேரடியாக உறப்படும் மூலதன நோக்கம் ஒன்றினைக் கொண்ட செலவினங்களே இவையாகும். மூலதன நடைபெறும் வேலையானது, அது பாவனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பொழுது, அதாவது கம்பனியினால் உத்தேசிக்கப்பட்ட விதத்தில் தொழிற்படும் ஆற்றலினை இது கொண்டிருப்பதற்கு தேவையான அமைவிடம் மற்றும் நிலையில் உள்ள போது, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய உரிய சொத்து வகைக்கு மாற்றப்படும். மூலதன நடைபெறும் வேலையானது ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து, கடன்பெறும் செலவுகள் உள்ளடங்கலாக, கிரயத்தில் எடுத்துரைக்கப்படும்.

1.2.3 **அருவச் சொத்துக்கள்**

ஓர் அருவச் சொத்தானது, அச் சொத்தின் பண்பினைக் கொண்ட எதிர்கால பொருளாதார நன்மைகளானவை நிறுவனத்திற்கு ஏற்படுவதுடன் அச் சொத்தின் கிரயமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 38 - அருவச் சொத்துக்கள் என்பதற்கு இணங்க நம்பகரமாக அளவிடக்கூடியதாக இருக்கும் சாத்தியப்பாடு இருந்தால், அது இனங்காணப்படும். அதற்கிணங்க, திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட சொத்துக் குறைவுறு நட்டங்களைக் கழித்து கிரயத்தில் நிதி நிலமைக் கூற்றில் இச் சொத்துக்கள் எடுத்துரைக்கப்படும்.

கணனி மென்பொருளானது நேர்கோட்டு முறையில் 5 வருட காலப்பகுதி ஒன்றுக்கு கடனழிவு செய்யப்படுகின்றது.

கல்வித்திட்ட அபிவிருத்திக் கிரயமானது 5 வருட காலப்பகுதி ஒன்றுக்கு நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றது.

1.2.4 **இருப்பு ஆவணங்கள்**

காலங்கடந்த மற்றும் மெதுவாக விற்பனையாகி நகரும் பொருட்களை உரிய பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட பின்னர், சராசரிக் கிரயத்தில் இருப்புக்கள் விலைமதிக்கப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் இருப்புக்கள் விற்கப்படக்கூடிய விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

இருப்புக்களை அதன் தற்போதய அமைவிடத்திற்கும் நிலமைக்கும் கொண்டுவருவதில் உறப்பட்ட கிரயமானது பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றது:-

| | | |
|---|---|---|
| மூலப் பொருட்கள் | - | கிரயத்தில் |
| முடிவுப் பொருட்கள் மற்றும் நடைபெறும் வேலை | - | நேர் மூலப் பொருட்கள், நேர்க் கூலி ஆகியவற்றின் கிரயத்தில் சாதாரண தொழிற்பாட்டின் அடிப்படையில் நிலையான உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதாசாரம் |
| இடமாறும் பொருட்கள் | - | உண்மைக் கிரயத்தில் |

மதிப்பிடப்பட்ட முடிவாக்கல் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு ஆகியவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாற்றக்கூடிய பெறுமதியாகும்.

### 1.2.5 சொத்துக்களின் குறைவு

சொத்துக் குறைவு பற்றிய ஏதேனும் குறிகாட்டி உள்ளதா என்பதை வரையறுப்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதேனும் குறிகாட்டி காணப்படின், அதன் பின்னர் சொத்துக்களை மீளப்பெறக்கூடிய தொகையானது மதிப்பிடப்படுகின்றது. சொத்து ஒன்றின் கொண்டு செல்லல் தொகை அல்லது காசினை உண்டுபண்ணும் அலகானது அதன் மீளப்பெறக்கூடிய தொகையிலும் பார்க்க அதிகரித்தால் குறைவுறு நட்டம் ஒன்று இனங்காணப்படும். மீளப்பெறக்கூடிய தொகையினை வரையறுப்பதற்கு பாவிக்கப்படும் மதிப்பீடுகளில் மாற்றமொன்று இருந்திருப்பின் குறைவுறு நட்டமானது நீக்கப்படும் (மறுதலையாக்கப்படும்).

### 1.2.6 நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனது நோக்கெல்லைக்குள் நிதிச் சொத்துக்களானவை இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்கள், முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள், விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக அல்லது பொருத்தமுடையதாக, பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு ஒன்றில் பாதுகாப்பு ஆவணங்களாக குறித்தொதுக்கப்பட்டு பெறப்பட்டனவாக வகைப்படுத்தப்படும். கம்பனியானது ஆரம்ப இனங்காணலில் நிதிச் சொத்துக்களின் வகைப்பாட்டினை வரையறுக்கின்றது.

சகல நிதிச் சொத்துக்களும், சொத்துகள் என்னும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் அல்லாது, கொடுக்கல் வாங்கலுக்கு நேரடிக் காரணமாயிருந்த செலவுகளைக் கூட்டி உண்மைப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றது.

கடன்களும் வருமதிகளும் வைப்புக்களும் எத் திகதியில் ஆரம்பிக்கின்றனவோ அத் திகதியிலேயே கம்பனியானது அவற்றை ஆரம்பத்தில் இனங்காண்கின்றது. ஏனைய சகல நிதிச் சொத்துக்களும் (இலாபம் அல்லது நட்டத்திற்கூடான உண்மைப் பெறுமதியில் குறித்தொதுக்கப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக), கம்பனியானது

ஆவணத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பாக மாறும் வியாபாரத் திகதியில் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

நிதிச் சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முடிவடையும் போது அல்லது நிதிச் சொத்தின் உரிமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகள் சகலதும் மாற்றப்படும் கொடுக்கல் வாங்கல் ஒன்றிலுள்ள நிதிச் சொத்துத் தொடர்பான ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை கம்பனி மாற்றும் போது கம்பனியானது அச் சொத்தினை இனங்காணலிலிருந்து நீக்குகின்றது. கம்பனியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட, மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களிலான ஏதேனும் வட்டியானது வேறானதோர் சொத்து அல்லது பொறுப்பாக இனங்காணப்படும்.

கம்பனியானது தொகையினை ஈடாக்குவதற்கான சட்ட உரிமை ஒன்றினைக் கொண்டிருந்தால் மாத்திரமே அத்துடன் ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே நேரத்தில் சொத்தினை பணமாக்கி பொறுப்பினைத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கும் போது நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடாக்கப்பட்டு தேறிய தொகை நிதி நிலமைக் கூற்றில் முன்னளிக்கப்படும்.

கம்பனியின் நிதிச் சொத்துக்களானவை காசு மற்றும் குறுங்கால முதலீடுகள் அத்துடன் வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

**(அ) இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள்**

வியாபாரத்திற்காக வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் பேரில் குறித்தொதுக்கப்பட்ட நிதிச் சொத்துக்களையும் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் உள்ளடக்குகின்றன. கிட்டிய எதிர்காலத்தில் விற்கும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்கள் கொள்ளல் செய்யப்படுவதனால் வியாபாரத்திற்கு வைக்கப்படுவனவாக அவை வகைப்படுத்தப்படுகின்றன.

முழுமொத்த விரிவான வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவினத்தில் இனங்காணப்பட்ட உண்மைப் பெறுமதியிலான மாற்றங்களுடன் சேர்த்து உண்மைப் பெறுமதியிலான நிதி நிலமைக் கூற்றில் இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் கொண்டுவரப்படுகின்றன.

இலாபம் அல்லது நட்டத்திற்கு ஊடான உண்மைப் பெறுமதியிலான ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

**(ஆ) கடன்களும் வருமதிகளும்**

செயலூக்கமிக்க சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது

வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களாக கடன்களும் வருமதிகளும் காணப்படும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அத்தகைய நிதிச் சொத்துக்கள் பின்னர் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தின் (EIR) இணைந்த பகுதியாக இருக்கும் கொள்ளல் மற்றும் கட்டணம் அல்லது கிரயங்கள் தொடர்பிலான ஏதேனும் கழிவு அல்லது உபகார வழங்கலினைக் கவனத்திற் கொண்டு கடனழிவுக் கிரயம் கணிப்பிடப்படுகின்றது. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

வியாபார வருமதிகள், ஊழியர் கடன்கள், வைப்புக்கள், முற்பணங்கள், ஏனைய வருமதிகள் மற்றும் காசும் காசுக்குச் சமமான விடயங்களும் ஆகியவற்றை கடன்களும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

### (இ) முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது வரையறுக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதிச் சொத்துக்கள் என்பன கம்பனியானது அவற்றை முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதற்கான சாதகமான உத்தேசம் மற்றும் ஆற்றலினைக் கொண்டுள்ள போது முதிர்வுக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், குறைவுறுதலைக் கழித்து பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தினை (EIR) பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள் அளவிடப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) கடனழிவானது முழுமொத்த வருமானக் கூற்றில் 'நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சொத்துக் குறைவுறுதலிலிருந்து எழும் நட்டங்களானவை நிதிக் கிரயத்தில் முழுமொத்த வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களிலான முதலீடுகளானவை முதிர்வுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்து முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### (ஈ) விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதி முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாக குறித்தொதுக்கப்பட்ட அல்லது மேற்போந்த நிதிச் சொத்துக்களின் எந்தவிதமான வகுதிக்குள்ளும் வகைப்படுத்தப்படாத பெற்றுக்கொள்ள முடியாத நிதிச் சொத்துக்களே விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப இனங்காணலின் பின்னர், அவை உண்மைப் பெறுமதியில் அளவிடப்படும் அத்துடன் குறைவுறு நட்டங்களினை விட அதன்கண்ணுள்ள மாற்றங்களானவை ஏனைய முழுமொத்த வருமானத்தில் இனங்காணப்பட்டு நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் ஒதுக்கப்பட்ட உண்மைப் பெறுமதியில் முன்னளிக்கப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான கடன் ஆவணங்கள் தொடர்பான வட்டி வருமானமானது பயனுறுதி வாய்ந்த வட்டி வீத (EIR) முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். முதலீடு ஒன்றானது இனங்காணலில் இரத்துச் செய்யப்படும் போது நிதியங்கள் மற்றும் ஒதுக்குகளில் திரளும் இலாபம் அல்லது நட்டமானது இலாபம் அல்லது நட்டமாக மீள் வகைப்படுத்தப்படும்.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான முதலீடாக ஆரம்ப இனங்காணலின் பேரில் நிதிச் சொத்து எதனையும் கம்பனியானது குறித்தொதுக்கியிருக்கவில்லை.

1.2.7.1 **நிதிச் சொத்துக்கள் குறைவடைதல்**

ஒரு நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்கூட்டம் ஒன்றானது குறைவடைகின்றது என்பதான ஏதேனும் யதார்த்தமான சான்று உள்ளதாவென ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் இக் கம்பனியானது மதிப்பிடுவதுடன் அத்தகைய குறைவானது நிகழ்ந்திருந்தால் அக் குறைவுறு தொகையானது சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையில் வேறுபாட்டினைக் கருத்திற்கொள்வதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

1.2.8 **காசும் காசுக்குச் சமமான விடயங்களும்**

கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள வைப்புக்கள் மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் என்பவற்றை காசும் காசுக்குச் சமமான விடயங்களும் உள்ளடக்குகின்றது.

“மறைமுக முறை யினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசுக்குச் சமமான விடயங்களினதும் ஒரு கூறாக வங்கி மேலதிகப்பற்று உள்ளடக்கப்படுகின்றது.

1.3 **பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்**

கேள்வியின் பேரிலான கொடுப்பனவிற்கு அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் நிலுவையாகவுள்ளவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புக்களாகும். அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறை சாராத (நிலையான) பொறுப்புக்களாகும்.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அறிந்த சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கம்பனியானது கொண்டிருக்கும் போது ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் இனங்காணப்படுகின்றன அத்துடன் பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சலானது இக் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படும் என்பது சாத்தியப்படக்கூடியதாக இருக்கின்றது.

1.3.1 **ஊழியர் நலன்கள்**

**(அ) ஓய்வூதியப் பணிக்கொடை ஏற்பாடு**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு தகுதியுள்ள சகல ஊழியர்களுக்குமான நலன் திட்டம் இக் கம்பனியானது தொடர்ந்துள்ளது. இந்த நலன் திட்டமானது வெளியக ரீதியில் நிதியீட்டம் செய்யப்படுவதில்லை.

ஏற்பாட்டினை கணிப்பீடு செய்வதற்காக பாவிக்கப்படும் அடிப்படை எடுகோள்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

| | |
|---|---|
| கழிவிடப்பட்ட வீதம் | 12% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 10% |
| பணியாட்டொகுதிப் புறழ்வு | 02% |
| ஓய்வுபெறல் வயது | 55 வருடங்கள் |

தொடர்ந்து செல்லும் வர்த்தக கம்பனியாக இக் கம்பனியானது தொடரும்.

**(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்**

நிறுவனம் ஒன்றானது தனியான நிறுவனம் ஒன்றாக நிலையான பங்களிப்பினைச் செலுத்துவதும் அத்துடன் மேலதிக தொகை ஒன்றினைச் செலுத்துவதற்கான சட்ட அல்லது உட்கிடையான கடப்பாடு ஒன்றினை கொண்டிராததுமான தொழிலுக்குப் பின்னரான திட்டம் ஒன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கான பங்களிப்புக்களுக்கான கடப்பாடுகளானவை, அவை நிலுவையிலுள்ள போது, முழுமொத்த வருமானக் கூற்றில் செலவு ஒன்றாக இனங்காணப்படும்.

**(இ) ஊழியர் சேமலாப நிதியம்**

அனுமதிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் கம்பனியும் ஊழியர்களும் முறையே 12% இனையும் 08% இனையும் பங்களிப்புச் செய்கின்றனர்.

**(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது ஒவ்வொரு ஊழியரினதும் சம்பளத்தின் அடிப்படையில் 3% இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

### 1.3.2 வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகள்

வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகளானவை கிரயத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது.

### 1.3.3 வரி விதிப்பு

பங்கிலாபங்கள் அல்லது வட்டி ஆகியவற்றிலிருந்தான மிகை மற்றும் வருமானத்தினை விட இக் கம்பனியின் மிகை மற்றும் வருமானம் ஆகியன 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7 (ixiv) ஆம் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

### 1.3.4 பிற்போடப்பட்ட வரி

2006 ஆம் ஆண்டின் 10 இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7 (ixiv) ஆம் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதனால் இக் கம்பனியின் மிகை மற்றும் வருமானமாக, பிற்போடப்பட்ட வரிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்

நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது பொருளாதார நலன்களின் மாற்றமானது சாத்தியப்படக்கூடியதாகவில்லாத அல்லது நம்பகரமாக மதிப்பிடப்படக்கூடியதாகவில்லாத நிகழ்கால கடப்பாடுகளின் மூலம் மாத்திரமே அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகளாக எதிர்பாராத பொறுப்புக்கள் உள்ளன. இக் கம்பனியின் மூலதனப் பொறுப்புக்களும் எதிர்பாராத பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களின் உரிய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.4 விரிவான வருமானக் கூற்று

மூலதன ஒதுக்கு – (மூலதனக் கொடைகளுடன் தொடர்புபட்டவை)

சுகாதார அமைச்சு, கெயார் (CARE) மற்றும் வரையறுக்கப்பட்ட சிலோன் புகையிலைக் கம்பனி ஆகியவற்றினால் வழங்கப்பட்ட, 2000 ஆம் ஆண்டிலிருந்து நிதிச் சொத்துக்கள் மீது செலவழிக்கப்படும் நிதியங்கள் மூலதனக் கொடைகளாக கருதப்பட்டுள்ளன ஆதலால் இவ் உருப்படிகள் மீதான பெறுமானத் தேய்வானது, அத் தேய்வினை ஆண்டுக்கான மொத்த தேய்வுக் கட்டணத்திற்கு எதிராக ஈடாக்கும் அதேவேளை உரிய மூலதன கொடைக் கணக்குகளில் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

### 1.4.1 மானியக் கொடை

அரசாங்க மானியக் கொடைகளானவை, அக் கொடையானது பெற்றுக்கொள்ளப்பட்டு அதனுடன் இணைந்த சகல நிபந்தனைகளும் இணங்கியொழுகப்படும் என்னும் நியாயமான உறுதிப்பாடு காணப்படுமிடத்து, இனங்காணப்படும்.

உறப்பட்ட செலவுகளுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை, செலவுகள் இனங்காணப்படும் அதே காலப்பகுதியில் முழுமொத்த வருமானக் கூற்றில் வருமானமாக இனங்காணப்படும். சொத்து ஒன்றின் செலவுக்காக இக் கம்பனிக்கு இழப்பினை ஈடுசெய்யும் கொடைகளானவை நிதி நிலமைக் கூற்றில் இனங்காணப்படும்.

### 1.4.3 செலவினம்

(அ.) உறப்படும் செலவுக்கும் குறித்த வருமான உருப்படிகளின் உழைப்புக்கும் இடையிலான நேரடி இணைப்பின் அடிப்படையில் முழுமொத்த வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படும். இக் கம்பனியினை நடாத்துதல் மற்றும் வினைத்திறனான நிலையில் மூலதனச் சொத்துக்களைப் பராமரித்தல் ஆகியவற்றில் உள்ளாகும் சகல செலவினங்களும் ஆண்டிற்கான மிகையினை அடையும் வருமானத்துக்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

### 1.4.4 நிதிச் செலவினம்/ வருமானம்

முதலீடு செய்யப்பட்ட நிதியங்களின் மீது அட்டுறு அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியினை நிதி வருமானம் உள்ளடக்குகின்றது.

### 1.5 காசுப் பாய்ச்சல் கூற்று

கணக்கீட்டு நியமங்கள் 7 இற்கிணங்க காசுப் பாய்ச்சற் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்ட வட்டியானது செயற்பாட்டு காசுப் பாய்ச்சலின் கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டியானது முதலீட்டு காசுப் பாய்ச்சலின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

### 1.6 அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னர் நிகழும் நிகழ்வுகளின் அடிப்படையான விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவசியமானவிடத்து, பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

### 1.7 வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்கள்

கம்பனியின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் வெளியிடப்பட்ட திகதி வரையில், வெளியிடப்பட்ட ஆனால் இன்னமும் செயல்வலுவுக்கு வராத நியமங்களானவை கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. வெளியிடப்பட்ட நியமங்களினதும் பொருள்கோடல்களினதும் இப் பட்டியல்படுத்தலானது எதிர்காலத் திகதி ஒன்றில் பிரயோகிக்கப்படும் போது வெளிப்படுத்தல்கள், நிதி நிலமை அல்லது செயற்றிறன் மீதான தாக்கம் ஒன்றினை கம்பனி நியாயமாக எதிர்பார்ப்பதாகவே உள்ளது. இந் நியமங்கள் செயல்வலுவுக்கு வரும் போது அவற்றைப் பின்பற்றும் உத்தேசம் கம்பனிக்கு உள்ளது.

**(அ.) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 - நிதி ஆவணங்கள்:**
வகைப்படுத்தலும் அளவீடும் என்னும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 ஆனது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இனை பதிலீடாக்குவதுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 39 இல் வரையறுக்கப்பட்டவாறு நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டுக்கு ஏற்புடையதாகின்றது. இந் நியமத்தின் கட்டாய செயல்வலுத் திகதியானது பிற்போடப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 இன் முதலாவது கட்டத்தினைப் பின்பற்றுதலானது கம்பனியின் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் விளைவு ஒன்றினைக் கொண்டிருக்கும் ஆனால் நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டில் தாக்கம் எதனையும் சாத்தியமாகக் கொண்டிருக்காது. முழுமையானதோர் தோற்றப்பாட்டினை அளிக்கும் பொருட்டு ஏனைய கட்டங்களை வெளியிடும் போது அவற்றுடன் இணைந்த விளைவினைக் கம்பனியானது அளவிடும்.

### 1.8 விற்பனைக்கான நடைமுறை சாராத சொத்துக்கள்

தொடர்ந்து பாவிப்பதை விட முதற்படியாக கையுதிர்த்தல் ஒன்றுக்கூடாக மீளப்பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடைமுறை சாராத சொத்துக்களானவை விற்பனைக்கு வைத்திருக்கப் படுபவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்படுவதற்கு உடன் முன்னர், இச் சொத்துக்களானவை இக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க மீள அளவிடப்பட்டுள்ளன. அதன் பின்னர், இச் சொத்துகளானவை அவற்றின் கொண்டு செல்லல் தொகை மற்றும் விற்பனைக்கான கிரயம் கழித்த உண்மைப் பெறுமதி ஆகியவற்றிலும் குறைவாக அளவிடப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருக்கப்படுவதான ஆரம்ப வகைப்படுத்தல் மீதான சொத்துக் குறைவுறு நட்டங்கள் மற்றும் மீள் அளவீட்டின் பேரில் அடுத்துவரும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் என்பன இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளன. ஏதேனும் திரண்ட குறைவுறு நட்டத்தினை விடக் கூடுதலாக இலாபங்கள் இனங்காணப்படுவதில்லை.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015 ரூபா சதம் | 2014 ரூபா சதம் |
|---|---|---|
| **02. நடப்பாண்டில் மீளளிக்கப்பட்ட செலவுகள்** | | |
| சுகாதார அமைச்சின் மீளளிக்கப்பட்ட செலவுகள் | 1,776,421,902.86 | 1,776,560,232 |
| | 1,776,421,902.86 | 1,776,560,232 |
| **03. உற்பத்திச் செலவு** | | |
| மூலப்பொருள் | 1,571,947,199.31 | 1,429,613,561 |
| நேரடித் தொழிலாளர்கள் | 132,557,413.91 | 109,605,729 |
| தொழிற்சாலை பொதுச் செலவுகள் | 90,556,367.17 | 89,129,410 |
| ஆரம்ப செலவு | 1,795,060,980.39 | 1,628,348,699 |
| கூட்டுக: ஆண்டு தொடக்கத்தில் பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள் | 39,550,477.97 | 16,192,484 |
| ஆண்டு தொடக்கத்தில் பல்வேறுபட்ட உற்பத்திகள் | - | 86,008 |
| கழிக்குக: ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள் | (38,202,137.04) | (39,550,478) |
| ஆண்டு இறுதியில் பல்வேறுபட்ட உற்பத்திகள் | - | (86,008) |
| மீள்பதனிடல் செலவு | (3,213,954.00) | (443,713) |
| | 1,793,195,367.32 | 1,604,546,992 |
| **04. ஏனைய வருமானம்** | | |
| வரையறையல்லா விற்பனை | 15,931,714.45 | 11,651,849 |
| ஏனைய வருமானம் | 4,884,242.05 | 145,610 |
| திறைசேரி உண்டியல் மீதான வட்டி வருமானம் | 3,599,382.96 | 5,443,747 |
| பொதி விற்பனை | - | 2,068,770 |
| பலவித வருமானமும் நானாவித வருமானமும் | - | 308,837 |
| வீட்டுக்கடன் வட்டி | 1,364,374.97 | 1,469,059 |
| | 25,779,714.43 | 21,087,872 |

**05. ஆண்டிற்கான செலவினை விட வருமானம்**

வருடத்தில் செலவை மிஞ்சிய வருமானத்தை கணக்கிடும் போது பின்வரும் விடயங்களுக்கு அறவீடுகள் செய்யப்பட்டுள்ளன

| | 2015 ரூபா சதம் | 2014 ரூபா சதம் |
|---|---|---|
| அடிப்படை சம்பளங்களும் ஊக்குவிப்புகளும் | 8,008,393.00 | 6,095,071 |
| கணக்காய்வுக் கட்டணம் | 109,807.50 | 99,825 |
| ஏனைய நிருவாக செலவுகள் | 27,985,700.48 | 29,891,792 |
| விநியோக செலவுகள் | 11,119,781.08 | 7,232,959 |
| நிதி மற்றும் ஏனைய செலவுகள் | 3,272,031.49 | 1,311,290 |
| | 50,495,713.55 | 44,630,937 |

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

### 06. ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம்

| | 2015.01.01 ஆம் திகதி மீதி | சேர்ப்புக்கள் | மாற்றல்கள் | 2015.12.31 ஆம் திகதி மீதி |
|---|---|---|---|---|
| **செலவு / பெறுமதி** | | | | |
| காணி | 220,000,000.00 | - | - | 220,000,000.00 |
| கட்டடம் | 73,311,959.28 | 3,452,122.78 | - | 76,764,082.06 |
| பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும் | 137,780,630.79 | 20,641,826.41 | (600,000.00) | 157,822,457.20 |
| மோட்டார் வாகனம் | 13,258,750.00 | 8,950,000.00 | - | 22,208,750.00 |
| | 10,197,189.38 | | | 11,929,912.97 |
| உபகரணங்களும் கருவிகளும் | | 1,732,723.59 | - | |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 5,192,330.00 | 509,857.50 | - | 5,702,187.50 |
| கமத்தொழில் உபகரணங்கள் | 138,650.00 | - | - | 138,650.00 |
| மின்சார வேலைகள் | 1,127,746.45 | 1,320,904.36 | - | 2,448,650.81 |
| அலுவலக உபகரணங்கள் | 10,441,631.62 | 1,862,495.00 | - | 12,304,126.62 |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 3,552,848.70 | 782,002.59 | - | 4,334,851.29 |
| | 475,001,736.22 | 39,251,932.23 | (600,000.00) | 513,653,668.45 |

| | 2015.01.01 ஆம் திகதி மீதி | சேர்ப்புக்கள் | மாற்றல்கள் | 2015.12.31 ஆம் திகதி மீதி |
|---|---|---|---|---|
| **திரண்ட பெறுமானத் தேய்வு** | | | | |
| கட்டடம் | 7,820,672.40 | 3,793,402.57 | - | 11,614,074.97 |
| பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும் | 29,687,660.25 | 14,811,503.90 | (130,000.00) | 44,369,164.15 |
| மோட்டார் வாகனம் | 4,738,792.17 | 3,099,250.00 | - | 7,838,042.17 |
| உபகரணங்களும் கருவிகளும் | 4,675,887.81 | 2,300,114.45 | - | 6,976,002.26 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 1,054,930.50 | 570,040.69 | - | 1,624,971.19 |
| கமத்தொழில் உபகரணங்கள் | 30,040.83 | 13,865.00 | - | 43,905.83 |
| மின்சார வேலைகள் | 740,476.96 | 309,448.33 | - | 1,049,925.29 |
| அலுவலக உபகரணங்கள் | 1,985,755.84 | 1,062,186.83 | - | 3,047,942.67 |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 786,174.92 | 385,430.71 | - | 1,171,605.63 |
| | 51,520,391.68 | 26,345,242.48 | (130,000.00) | 77,735,634.16 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015.12.31 | 2014.12.31 |
|---|---|---|
| பதிவழிப்பு பெறுமதி | ரூபா சதம் | ரூபா |
| காணி | 220,000,000.00 | 220,000,000 |
| கட்டடம் | 65,150,007.09 | 65,491,287 |
| பொறித்தொகுதிகளும் இயந்திர சாதனங்களும் | 113,453,293.05 | 108,092,971 |
| மோட்டார் வாகனம் | 14,370,707.83 | 8,519,958 |
| உபகரணங்களும் கருவிகளும் | 4,953,910.71 | 5,521,302 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 4,077,216.31 | 4,137,400 |
| கமத்தொழில் உபகரணங்கள் | 94,744.17 | 108,609 |
| மின்சார வேலைகள் | 1,398,725.52 | 387,269 |
| அலுவலக உபகரணங்கள் | 9,256,183.95 | 8,455,876 |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 3,163,245.66 | 2,766,674 |
| | 435,918,034.29 | 423,481,345 |

குறிப்பு: காணிக்கான உறுதி கம்பனி மட்டத்தில் இல்லை.

| | 2015.12.31 | 2014.12.31 |
|---|---|---|
| 06' தொட்டுணர முடியாத சொத்துக்கள் | ரூபா சதம் | ரூபா |
| செலவு | 661,187.57 | - |
| (-)திரண்ட தேய்மானம் | - | - |
| பதிவழிப்பு பெறுமதி | 661,187.57 | - |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

### 07. இருப்பு பொருட்கள்

| | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| **மூலப்பொருள்** | | |
| சோயா | 91,069,823.00 | 104,928,120 |
| பால்மா | 55,451,249.50 | 61,476,875 |
| சோளம் | 8,632,731.05 | 29,615,650 |
| விட்டமின்கள் | 3,684,367.50 | 13,359,958 |
| கனியங்கள் | 2,545,452.00 | 3,573,050 |
| கிராப்ட் கடதாசி பைகள் | 385,036.80 | 2,197,440 |
| பல படுகை சவ்வு - குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் | 3,237,160.62 | 1,348,984 |
| பொலித்தீன் பைகள் - சிவப்பு | 250,804.76 | 1,184,963 |
| பொலித்தீன் பைகள் - மஞ்சள் | 3,830,443.24 | 250,805 |
| டுவைன் நூல் | - | 68,743 |
| பொறியியல் களஞ்சியம் | 10,371,511.77 | 9,231,383 |
| டீசல் | 1,586,975.00 | 3,865,251 |
| பயன்படுத்தப்பட்ட பொலி பைகள் | - | 78,292 |
| பயன்படுத்தப்பட்ட பால்மா பைகள் | - | 6,171 |
| பொலிபப்லின் பைகள் | - | 2,911 |
| வெற்று கொள்கலன்கள் | - | 167 |
| விரயம் | - | 1,378 |
| செய்து கொண்டிருக்கும் வேலைகள் | 9,025,425.56 | 14,567,809 |
| உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 38,202,137.04 | 39,550,478 |
| மொத்தம் | 228,273,117.84 | 285,308,428 |

### 08. வர்த்தகம் மற்றும் ஏனைய வரவேண்டியவைகள்

| | | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|---|
| வீட்டுக்கடன் - ஆதனக்கடன் | II | 17,877,066.41 | 24,472,839 |
| கடனாளிகள் | | 1,627,719.38 | 10,963,842 |
| வீட்டுக்கடன் - இடர் கடன் | II | 10,972,101.87 | 5,959,544 |
| மீளளிக்கப்படும் வைப்புகள் - இலங்கை மின்சாரபசபை | | 987,500.00 | 987,500 |
| சிறு வைப்புகளும் முற்கொடுப்பனவுகளும் | | 102,748,743.02 | 831,314 |
| சுற்றுலா முற்பணம் | | 233,000.00 | 198,000 |
| விழா முற்பணம் | | - | 159,000 |
| எதிர்பாரா செலவுகள் | | - | 154,902 |
| வைப்புகள் | | 101,000.00 | 150,676 |
| வீடமைப்புக் கடன் 5% | | - | - |
| | | 134,547,130.68 | 43,877,617 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| **09. முதலீடுகள்** | | |
| திறைசேரி உண்டியல்கள் - முகப்பெறுமதி | 90,000,000.00 | 60,000,000 |
| வருமதியுள்ள திறைசேரி உண்டியல் வட்டி வருமானம் | 251,730.77 | 200,275 |
| | 90,251,730.77 | 60,200,275 |
| **10. பணமும் பணத்திற்கு சமமானவையும்** | | |
| இலங்கை வங்கி - ஜா-எல 71324617 | 53,922,992.19 | 7,461,286 |
| | 53,922,992.19 | 7,461,286 |

**11. வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்**

2010-06-23 ஆம் திகதியன்று அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திரிபோசா கம்பனியின் முகாமைத்துவம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முழுமையாக அரசுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக 304,600,000/- ரூபாவைக் கொண்ட வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்துடன் 2010 செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷா கம்பனியானது தாபிக்கப்பட்டது.

| | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| **12. மூலதன ஒதுக்கங்கள்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 136,873,127.45 | 152,382,927 |
| சுகாதார அமைச்சின் மூலதன நன்கொடை | 39,251,932.23 | 7,913,121 |
| மூலதன சொத்துக்கள் மற்றும் சுகாதார அமைச்சின் மூலதன முற்பணம் | 158,265,266.31 | - |
| திரு. கிரான் அத்தபத்து (நலன்புரி நிதியம்) | - | 462,000 |
| நிலையான சொத்துக்கள் அகற்றல் செலவுகள் | (470,000.00) | |
| கழிக்குக: ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கட்டணம் | (26,345,242.48) | (23,884,920) |
| ஆண்டிறுதியில் மீதி | 307,575,083.51 | 136,873,127 |
| **13. ஒதுக்கங்களின் மீள் பெறுமதியிடல்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 307,170,027.56 | 307,170,028 |
| ஆண்டில் மீள் பெறுமதியிடல் | - | - |
| ஆண்டிறுதியில் மீதி | 307,170,027.56 | 307,170,028 |
| **14. ஓய்வூதிய நலன்கள்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 28,130,680.00 | 30,086,348 |
| கழிக்குக: ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | (977,538.25) | (1,543,740) |
| ஆண்டிற்கான நிதி ஏற்பாடு | 2,440,543.25 | (411,928) |
| ஆண்டிறுதியில் மீதி | 29,593,685.00 | 28,130,680 |

| | | |
|---|---|---|
| கழிவு வீதம் | 12% | 12% |
| எதிர்கால சம்பளவேற்ற வீதம் | 10% | 10% |
| பதவியணி சுழற்சி | 2% | 2% |
| ஓய்வுபெறும் வயது | வயது - 55 | வயது - 55 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| **15. மருத்துவ நிதியம்** | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | 141,163.96 | 62,795 |
| ஆண்டில் பங்களிப்பு | 173,968.00 | 190,158 |
| ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவு | (73,642.00) | (111,789) |
| ஆண்டிறுதியில் மீதி | 241,489.96 | 141,164 |
| **16. வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்** | | |
| கடன் தருநர் | 37,381,448.21 | 44,465,679 |
| சம்பளக் கட்டுப்பாடு | - | 494,288 |
| கணக்காய்வாளர் ஊதிய கொடுப்பனவு | 209,632.50 | 190,575 |
| மீளளிக்கப்படும் வைப்புகள் | 179,337.50 | 153,238 |
| செலவுகளுக்கான நிதி ஏற்பாடு | - | 34,088 |
| | 37,770,418.21 | 45,337,868 |

**17. மூலதன கொடை சம்பந்தமான பெறுமானத்தேய்வு.**

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் சம்பந்தமான பெறுமானத்தேய்வு, இந்த ஆண்டின் மொத்த பெறுமானத்தேய்வுக் கட்டணத்தை குறைத்துக் கொண்டு உரிய மூலதனக் கொடை கணக்கிற்கு அறவிடப்பட்டுள்ளது.

**18. முன்னைய ஆண்டு செம்மையாக்கல்**

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய கணக்குகளுக்கான செம்மையாக்கல் | 36,869.82 | 7,457.01 |
| 2014 ஆம் ஆண்டில் ,யந்திரங்கள் அகற்றல் மீதான நட்டம் | (470,000.00) | - |
| | (433,130.18) | 7,457.01 |

**19. பொறுப்புகளும் எதிர்பார்க்கப்படாதவைகளும்**

அறிக்கையிடப்பட்ட திகதியில் எவ்வித வெளித்தெறியும் பொறுப்புகளோ அல்லது எதிர்பார்க்காத நிகழ்வுகளோ நடைபெறவில்லை.

**20. தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள்**

முக்கிய பதவியணி உறுப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியின் முக்கிய பதவியணி உறுப்பினர்களாவது, அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகும்.

**21. அறிக்கையிடப்பட்ட திகதியன்றின் பின்னர் நிகழும் சம்பவங்கள்**

அறிக்கையிடப்பட்ட திகதியன்றின் பின்னர் நிதிக் கூற்றில் சீராக்கல்களை செய்வதற்கு எண்பிக்கப்படுவதற்குத் தேவையான எவ்வித முக்கிய சம்பவங்களும் நடைபெறவில்லை

22. **அரைக்கப்பட்ட கலவை**

சுகாதார அமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளவாறு அரைக்கப்பட்ட கலவையில் பின்வருவன உள்ளடக்கப்பட்டது.

| | சிபாரிசுசெய்யப்பட்ட | உண்மையான | வித்தியாசம் |
|---|---|---|---|
| சோளம் | 66.00% | 73.39% | -7.39% |
| சோயா | 30.00% | 22.94% | 7.06% |
| பால் | 3.00% | 2.79% | 0.21% |
| விட்டமின் | 0.10% | 0.09% | 0.01% |
| கனியம் | 0.90% | 0.79% | 0.11% |
| | 100.00% | 100.00% | 0.00% |

23. கழிவின் அளவு

| | ஈரலிப்பு | பொதியிடல் | மொத்தம் |
|---|---|---|---|
| சோளம் | 14.00% | 6.50% | 20.50% |
| சோயா | 12.00% | 9.50% | 21.50% |
| பால் | 4.00% | 0.00% | 4.00% |
| விட்டமின் | 3.00% | 0.00% | 3.00% |
| கனியம் | 3.00% | 0.00% | 3.00% |

24. பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள் (பெறுமதியில்)

| | அளவு | பெறுமதி ரூபா | ஒரு கிலோவுக்கான சராசரி பெறுமதி ரூபா | ஒரு கிலோவுக்கான பெறுமதி ரூபா | வித்தியாசம் ரூபா |
|---|---|---|---|---|---|
| சோளம்(கி.கி) | 11,598,378 | 581,141,112 | 50.11 | 51.06 | 0.95 |
| சோயா (கி.கி) | 3,625,320 | 488,205,786 | 134.67 | 136.53 | 1.86 |
| பால் (கி.கி) | 441,375 | 339,815,625 | 769.90 | 509.00 | (260.90) |
| விட்டமின் (கி.கி) | 14,575 | 32,032,058 | 2,197.74 | 3,996.00 | 1,798.26 |
| கனியம் (கி.கி) | 124,325 | 32,059,147 | 257.87 | 362.97 | 105.10 |
| கிராப்ட் கடதாசி (பைகள்) | 648,300 | 19,611,725 | 30.25 | 25.62 | (4.63) |
| பொலித்தீன் (பைகள்) | 9,237,000 | 33,240,336 | 3.60 | 4.00 | 0.40 |
| பொலித்தீன் ரோல் | 83,752.60 | 40,199,166 | 479.98 | 479.00 | (0.98) |
| நூல் கோன் அளவு | 524 | 99,861 | 190.57 | 253.08 | 62.51 |

25. உற்பத்திகள்

| | இலக்கு | உண்மையான | வித்தியாசம் |
|---|---|---|---|
| உற்பத்தி செய்யப்பட்டமாஸ்டர் பொதிகள் | 710,347 | 648,545 | (61,802) |
| நிர்வாக செலவு உட்பட உற்பத்திச் செலவு விநியோக மற்றும் ஏனைய செலவுகள் | 2,500,000,000 | 1,842,342,740 | (657,657,260) |
| மாஸ்டர் பொதி ஒன்றுக்கான செலவு | 3,519.41 | 2,840.73 | 678.67 |

# இலங்கை திரிபோஷ லிமிடட்
## வருமான செலவுக் கூற்று
2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|---|
| **01. நடப்பாண்டில் மீளளிக்கப்பட்ட செலவுகள்** | | | |
| சுகாதார அமைச்சின் மீளளிக்கப்பட்ட செலவுகள் | | 1,776,421,902.86 | 1,776,560,232 |
| | | 1,776,421,902.86 | 1,776,560,232 |
| **02. உற்பத்திச் செலவு** | | | |
| மூலப்பொருள் | 02.1 | 1,571,947,199.31 | 1,429,613,561 |
| நேரடித் தொழிலாளர்கள் | 02.2 | 132,557,413.91 | 109,605,729 |
| தொழிற்சாலை பொதுப் பணி செலவுகள் | 02.3 | 90,556,367.17 | 89,129,410 |
| ஆரம்ப செலவு | | 1,795,060,980.39 | 1,628,348,699 |
| கூட்டுக: ஆண்டு தொடக்கத்தில் | | 39,550,477.97 | 16,192,484 |
| பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகள் | | | |
| ஆண்டு தொடக்கத்தில் சிறு உற்பத்திகள் | | | 86,008 |
| கழிக்குக:ஆண்டு இறுதியில் பூர்த்தி | | (38,202,137.04) | (39,550,478) |
| செய்யப்பட்ட உற்பத்திகள் | | | |
| ஆண்டு இறுதியில் சிறு உற்பத்திகள் | | - | (86,008) |
| மீள்பதனிடல் இழப்பு | | (3,213,954.00) | (443,713) |
| | | 1,793,195,367.32 | 1,604,546,992 |
| **02.1 மூலப்பொருள் பயன்பாடு** | | | |
| ஆரம்ப கையிருப்பு | | 218,004,587.81 | 98,759,306 |
| கூட்டுக: கொள்வனவுகள் | | | |
| சோளம் | | 571,589,036.91 | 507,513,342 |
| சோயா | | 469,873,548.10 | 509,341,294 |
| பால்மா | | 333,790,000.00 | 382,585,367 |
| கனியம் | | 31,141,493.00 | 22,364,343 |
| விட்டமின் | | 22,362,670.50 | 44,722,650 |
| கிராப்ட் கடதாசி (பைகள்) | | 13,322,691.75 | 18,848,676 |
| பொலித்தீன் பைகள் | | 75,029,056.54 | 73,428,607 |
| டுவைன் நூல் | | 378,800.00 | 191,109 |
| இறுதிக் கையிருப்பு | | (169,087,068.97) | (218,004,588) |
| | | 1,566,404,815.64 | 1,439,750,106 |
| கூட்டுக: வருட ஆரம்பத்தில் செய்து | | | |
| கொண்டிருக்கும் வேலைகள் | | 14,567,809.23 | 4,431,264 |
| கழிக்குக: வருட இறுதியில் செய்து | | | |
| கொண்டிருக்கும் வேலைகள் | | (9,025,425.56) | (14,567,809) |
| | | 1,571,947,199.31 | 1,429,613,561 |

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## வருமான செலவுக் கூற்று

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| **02.2 நேரடி தொழிலாளர்கள் மற்றும் முகாமைத்துவ செலவுகள்** | | |
| **சம்பளங்களும் ஊதியங்களும் - தொழிற்சாலை** | | |
| அடிப்படைச் சம்பளம் | **59,093,740.47** | 39,763,616 |
| மேலதிக வேலை நேரக்கொடுப்பணவு | **19,366,100.29** | 16,919,512 |
| வாழ்க்கைச் செலவு படி | **15,342,600.00** | 16,762,296 |
| ஊழியர் சேமலாப நிதியம் | **6,743,829.74** | 6,531,660 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு | **6,002,713.08** | 5,527,311 |
| குறியிலக்கு கொடுப்பனவு | **3,735,810.44** | 3,433,291 |
| லீவுக்கான கொடுப்பனவு | **3,848,103.13** | 3,318,386 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | **1,685,955.81** | 1,642,073 |
| விசேட கொடுப்பனவு | **892,091.25** | 619,858 |
| சுற்றுமுறை மற்றும உணவு கொடுப்பனவு | **1,583,666.00** | 1,479,700 |
| மருத்துவ மீள் கொடுப்பனவு | **381,791.82** | 222,213 |
| முகாமைத்துவ கட்டணம் | - | 96,444 |
| எதிர்பாரா செலவு | - | 9,506 |
| பணிக்கொடை | **2,413,806.16** | - |
| **ஒப்பந்த ஊதியங்கள்** | | |
| சம்பளங்களும் ஊதியங்களும் | **2,060,041.22** | 2,453,380 |
| மேலதிக வேலை நேரக்கொடுப்பணவு | **579,123.93** | 1,516,291 |
| ஊழியர் சேமலாப நிதியம் | **263,146.00** | 616,232 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | **65,786.49** | 154,058 |
| ஏனைய ஒப்பந்தங்கள் / வாழ்க்கைச் செலவு படி | **575,939.04** | 1,067,580 |
| **நலன்புரி மற்றும் மருத்துவம்** | - | |
| சீருடை, தலைக்கவசம், சலவை | **4,152,641.99** | 3,729,457 |
| தேனீர் செலவு | **2,763,811.00** | 2,527,712 |
| பதவியணி நலன்புரி | **100,180.00** | 37,656 |
| எரிவாயு மற்றும் ஏனைய | | |
| சிற்றுண்டிச்சாலை செலவுகள் | **259,005.00** | 455,423 |
| மருத்துவ / ஏனைய நிபுணத்துவ சேவை | **260,000.00** | 323,963 |
| மருத்துவ செலவு மீளளிப்பு | **360,361.05** | 385,649 |
| பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் | **27,170.00** | 12,463 |
| | **132,557,413.91** | 109,605,729 |

# இலங்கை திரிபோஷ லிமிடட்
## வருமான செலவுக் கூற்று
2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|---|
| **02.3** | **நேரடி பொதுப் பணிகள் மிகைச்செலவு** | | |
| | மின்சார கொதிகலன், மின் பிறப்பாக்கி எரிபொருள் | **58,598,387.40** | 61,746,548 |
| | பொறித்தொகுதி, இயந்திரசாதன பராமரிப்பு | **24,184,401.01** | 22,351,262 |
| | நேரடியல்லாத உற்பத்தி பொருட்கள் | - | 343,376 |
| | காப்புறுதி | **456,185.59** | 921,464 |
| | வாகன திருத்த வேலைகளுக்கான கட்டணம் | **2,207,561.77** | 1,136,545 |
| | தொழிற்சாலை பராமரிப்பு செலவுகள் | **1,821,128.12** | 690,107 |
| | வீத வரிகளும் வரிகளும் | **486,968.60** | 296,850 |
| | பூச்சிக் கட்டுப்பாடு | **970,412.27** | 616,667 |
| | இரசாயன புகை இடல் | **329,968.95** | 443,176 |
| | ஏனைய தொழிற்சாலை செலவுகள் | - | 162,604 |
| | தொலைபேசி | **333,234.34** | 302,121 |
| | ஏனைய ஆய்வுகூட செலவுகள் | **1,168,119.12** | 111,414 |
| | மருத்துவ நிலைய பராமரிப்பு | - | 7,276 |
| | | **90,556,367.17** | 89,129,410 |
| **03.** | **ஏனைய வருமானங்கள்** | | |
| | வரையறையல்லா விற்பனை | **15,931,714.45** | 11,651,849 |
| | திறைசேரி உண்டியல் மீதான வட்டி வருமானம் | **3,599,382.96** | 5,443,747 |
| | பொதி விற்பனை | - | 2,068,770 |
| | வீட்டுக்கடன் வட்டி | **1,364,374.97** | 1,469,059 |
| | ஏனைய வருமானம் | **4,884,242.05** | 145,610 |
| | சிறு வருமானமும் நானாவித வருமானமும் | - | 308,837 |
| | நன்கொடை - திரு. கிரான் அத்தபத்து | - | - |
| | | **25,779,714.43** | 21,087,872 |

# இலங்கை திரிபோஷ லிமிடட்

## வருமான செலவுக் கூற்று

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கானது

| | 2015.12.31<br>ரூபா சதம் | 2014.12.31<br>ரூபா |
|---|---|---|
| **04. நிருவாக செலவுகள்** | | |
| கட்டட திருத்த வேலைகளும் பராமரிப்பும் | **2,918,952.51** | 7,791,700 |
| பாதுகாப்பு கட்டணங்கள் | **6,932,192.71** | 7,098,930 |
| அடிப்படைச் சம்பளம் | **8,008,393.00** | 6,095,071 |
| முகாமைத்துவ கட்டணம் | **2,172,404.03** | 4,545,573 |
| பதவியணி நலன்புரி | **1,521,857.19** | 1,550,191 |
| வாழ்க்கைச் செலவுப்படி | **1,560,000.00** | 1,432,550 |
| ஊழியர் சேமலாப நிதியம் | **1,084,434.32** | 1,004,288 |
| மேலதிக நேர கொடுப்பனவு | **964,760.92** | 963,301 |
| காகிதாதிகள் | **1,162,744.23** | 1,203,276 |
| விளம்பரம் | **803,392.50** | 747,852 |
| கொடுப்பனவுகள் | **420,000.00** | 464,720 |
| தபால் கட்டணம் | **434,596.00** | 391,233 |
| லீவுக்கான கொடுப்பனவு | **325,568.25** | 351,646 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | **271,107.48** | 241,911 |
| தொலைபேசி கட்டணம் | **222,156.23** | 196,561 |
| சாதார செலவுகள் | **208,291.09** | 164,340 |
| சாரதிகளுக்கான இணைந்தபடி | - | 161,375 |
| தோட்ட பராமரிப்பு | **70,305.46** | 128,484 |
| அலுவலக உபகரண பராமரிப்பு | **862,565.55** | 125,052 |
| சீருடை கொடுப்பனவு | - | 125,000 |
| துப்புரவேற்பாடு | **122,003.64** | 106,219 |
| கணக்காய்வு கட்டணம் | **109,807.50** | 99,825 |
| பதவியணி பயிற்சி கட்டணம் | **344,400.00** | 73,500 |
| தேனீர் செலவு | - | 70,226 |
| ஏனைய செலவுகள் | - | 54,940 |
| சட்ட மற்றும் தொழிற்துறை செலவுகள் | **574,758.50** | 54,600 |
| பிரயாணச் செலவுகள் | **3,971,579.87** | 273,682 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு | **1,037,630.00** | 844,325 |
| | **36,103,900.98** | 36,360,371 |
| **05. விநியோகச் செலவு** | | |
| போக்குவரத்துச் செலவு | **11,119,781.08** | 7,232,959 |
| விநியோகச் செலவு | - | - |
| | **11,119,781.08** | 7,232,959 |
| **06. நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| வங்கிக் கட்டணம் | **58,077.49** | 867,576 |
| மீள் பதனிடல் செலவு | **3,213,954.00** | 443,713 |
| | **3,272,031.49** | 1,311,290 |

*KRC*

கபில ரத்னசிங்க என்ட் கம்பனி
(பட்டயக் கணக்காளர்கள்)

83/1/2, சுபத்திரராம வீதி,
கங்கொடவில, நுகேகொட, இலங்கை.
தொ.பே. : +94 11 2822 164
பெக்ஸ் : +94 11 3103 870
கையடக்க தொ.பே. : +94 71 6840 945
மின்னஞ்சல் : krc@krathnasinghe.com
இணையம் : www.krathnasinghe.com

2017 **ஏப்ரல் மாதம்** 07 ஆம் திகதி
பணிப்பாளர் சபை
வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி,
த.பெ. இல. 17, கப்புவத்த,
ஜா-எல.

ஐயா,

**வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனி (PB 3873)**
**2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு**

2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா திரிபோஷ கம்பனியின் (இந்தக் கம்பனியின்) கணக்காய்வாளர்களாக, கூறப்பட்ட காலப்பகுதிக்கான தங்களின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்தினை வெளிப்படுத்துவதே எமது பிரதான பொறுப்பாகவிருந்தது. எவ்வாறெனினும், எமது வாடிக்கையாளர்களுக்கு ஆகக்கூடிய பெறுமதியினை வழங்குகையில் எமது நிறுவனத்தின் மரபுக்கு ஒத்திசைவாக, பெறுமதி சேர் உத்திகள், தகவல்கள் மற்றும் தங்களின் கணக்கீட்டுப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் ஆகியவற்றைத் தங்களுக்கு வழங்கி, எமது நியதிச்சட்ட கடமைகளுக்கு அப்பாற்செல்லும் சேவை ஒன்றினைத் வழங்குவதற்கு நாம் பாடுபடுகின்றோம். 2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் எமது கணக்காய்விலிருந்து எழும் அடிப்படை விடயங்களை எடுத்துரைப்பதே இவ் ஆவணத்தின் நோக்கமாகும்.

1. கம்பனியினால் பயனுள்ள நிருவாக வழிமுறையொன்றாக வரவுசெலவுத்திட்டம் பயன்படுத்தப்படவில்லை எனவும் வருடாந்த குறியிலக்கு உற்பத்தி மற்றும் செலவு கட்டுப்பாட்டினை அடையும் பொருட்டு கம்பனியினால்சார்பான வரவுசெலவுத்திட்டத்தை கட்டுப்படுத்துதலானது நடைமுறைப்படுத்தப்பட வில்லையெனவும் எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது.

1.1 **கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் செயற்பாடு தொடர்பிலான புள்ளி விபரம்**

| விடயம் | 2014 (அ) | 2015 (ஆ) | வித்தியாசம் (ஆ-இ) | பெறுபேறு |
|---|---|---|---|---|
| உற்பத்தி (மாஸ்டர் பேக்) | 612,068 | 648,545 | 36,477 | 5.96% ஆல் விருத்தியடைந்துள்ளது |
| உற்பத்திச் செலவு (ரூபா) | 1,628,348,699 | 1,795,060,980 | 166,712,281 | 10.24% ஆல் செலவு அதிகரித்துள்ளது |
| மாஸ்டர் பேக் ஒன்றுக்கான செலவு (ரூபா) | 2,660.40 | 2,767.83 | 107.42 | 4.04% இனால் செலவு குறைவடைந்துள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| நேர்கூலி, முகாமைத்துவ செலவு (ரூபா) | 109,605,729 | 132,557,414 | 22,951,685 | 20.94% இனால் செலவு குறைவடைந்துள்ளது |
| நிருவாக செலவு (ரூபா) | 36,360,371 | 36,103,901 | (256,470) | 0.71% இனால் செலவு குறைவடைந்துள்ளது |

2. **ஆவணச் சான்று - காணி**

**அவதானிப்புரைகள்**

கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள 220,000,000/- ரூபா கொண்ட காணிக்கான பெறுமதியை உறுதி செய்யும் பொருட்டு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணங்கள் எதுவும் கம்பனியினால் சமர்ப்பிக்கப்படாமை எம்மால் அவதானிக்கப்பட்டது.

**சிபாரிசு**

கம்பனி மனையிடத்திற்கான காணி உறுதி இருக்க வேண்டுமென சிபாரிசு செய்கின்றோம்.

**முகாமைத்துவக் கருத்துக்கள்**

இல 38 எனும் அனுமான திட்டத்தின் மூலம் அரசாங்க காணியொன்றாக இக்காணி இனம்காணப்பட்டுள்ளது.

3. **மின்சார வைப்பு - கொழும்பு**

**அவதானிப்புரைகள்**

ரூபா. 200,000/- இற்கான மின்சார வைப்பு தொடர்பில் கம்பனியானது எவ்வித ஆவணத்தையும் முன்வைக்காமை எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது.

**சிபாரிசு**

எதிர்வரும் காலங்களில் இந்த வைப்புக்கான மீதியை மீளப்பெறுவதற்கு இந்த வைப்பு தொடர்பில் சரியான ஆவணங்களை கம்பனி வைத்திருக்க வேண்டுமென சிபாரிசு செய்கின்றோம்.

**முகாமைத்துவக் கருத்துக்கள்**

இந்த ரூபா. 200,000/- வைப்பை உறுதிசெய்வதற்கான கோரிக்கை 2015.01.04 ஆம் திகதி இலங்கை மின்சார சபை கொழும்பு. அலுவலகத்திற்கு எழுத்துமூலம் அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் ஏற்புடைய உறுதியை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த வைப்பு பற்றிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிவுறுத்தல்கள் எம்மால் பெறப்படும்.

4. **வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்**

**அவதானிப்புரைகள்**

கம்பனியினால் கணக்காய்வாளர்களுக்கு அண்மைக்கால வருடாந்த இலாபம் (படிவம் 15) வழங்கப்படாமை எம்மால் அவதானிக்கப்பட்டது. கணக்காய்வாளர்களின் ஆவணங்களை பரிசீலனை செய்கையில் கம்பனியின் வெளிப்படுத்தல் மூலதனமானது 304,600,000/- ரூபா எனவும் இந்த வெளிபடுத்தல் மூலதனத்தின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் எடுத்துக் காட்டப்படவில்லை எனவும் எம்மால் அவதானிக்கப்பட்டது.

**சிபாரிசு**

கம்பனிகள் பதிவாளருக்கு காலத்துக்கு காலம் வருடாந்த அறிக்கை (படிவம் 15) சமர்ப்பிக்குமாறும், வெளிப்படுத்தல் மூலதன நிலுவை நிதிக்கூற்றில் எடுத்துக் காட்டுமாறும்

சிபாரிசு செய்கின்றோம்.

**முகாமைத்துவக் கருத்துக்கள்**

வருடாந்த அறிக்கை பதிவாளர் நாயகத்திடம் சமா்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களுக்கு செய்யப்பட்டுள்ள இல 11 எனும் குறிப்பின் கீழ் நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட மூலதனத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

5. **நடைமுறைக் கைந்நூல் பற்றாக்குறை**

**அவதானிப்புரைகள்**
தற்போது, இக் கம்பனி நடைமுறைக் கைந்நூல் ஒன்றினைக் கொண்டிருக்கவில்லை. எதிர்வரும் ஆண்டுகளில் அதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு இக் கம்பனி எதிர்பார்ப்பதனால் சிக்கலான மற்றும் மீண்டெழும் கொடுக்கல் வாங்கல்களுக்கான துல்லியமானதும் நிலையானதுமான கணக்கீட்டுத் தீர்வினை உறுதிப்படுத்துவதற்கு நடைமுறைக் கைந்நூல் ஒன்று மிக அத்தியாவசியமானதொன்றாக இருக்கும்.

இக் கம்பனியின் நாளாந்த நடவடிக்கைகளின் கூடுதல் முக்கியமான நிதி மற்றும் கணக்கீட்டு அம்சங்களைக் கையாள்வதற்கு ஒரு பொருத்தமான கைந்நூல் உருவாக்கப்பட வேண்டும் என நாம் ஆலோசனை கூறுகின்றோம். இக் கைந்நூலானது முறையற்ற விதத்தில் சிக்கல்தன்மை மிக்கதாகவோ அன்றி தயாரிக்கும் போது காலதாமதத்தினை ஏற்படுத்துவதாகவோ இருக்கக் கூடாது. இக் கைந்நூலானது சகல ஊழியர்களுக்கும் பயன்மிக்க ஆதாரம் ஒன்றாக தொழிற்பட முடியும். நிறுவனம் முழுவதும் ஒத்த தன்மை மற்றும் நிலையான தன்மை ஆகியவற்றை உருவாக்குவதற்கான வழிகாட்டல் ஒன்றினையும் தற்போதய நடைமுறைகளை மதிப்பிடுவதிலும், புதியவற்றை வகுப்பதிலும் உதவியினையும் இது வழங்கும் என்பதுடன் புதிய ஆளணியினைப் பயிற்றுவிப்பதில் உதவியினை வழங்க வேண்டும்.

கூடுதல் பயனுறுதி வாய்ந்ததாக இருக்கும் பொருட்டு, குறைந்த பட்சம் பின்வரும் கூறுகளை இக் கைந்நூலானது உள்ளடக்க வேண்டும் என நாம் எண்ணுகின்றோம்:

- பொறுப்புக் கூற்று மற்றும் கணக்கீட்டுத் தொழிற்பாட்டு அட்டவணை.
- பதவிகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விவரம்.
- நியம மற்றும் மீண்டெழும் பேரேட்டுப் பதிவுகள் போன்ற முக்கியமான கொடுக்கல் வாங்கல்களின் விளக்கங்கள் மற்றும் விபரிப்புகள் உள்ளடங்கலாக, பின்பற்றப்படவுள்ள முறைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பற்றிய விவரம்.
- கணக்கு அட்டவணைகள்.
- தரவுகளை செய்முறைப்படுத்தும் போதும் துரிதமாகப் பதிவிடும் போதும் பாவிக்கப்பட வேண்டிய வேறு ஏதேனும் நியம ஆவணங்கள் அல்லது படிவங்கள் பற்றிய விவரம்.

**முகாமைத்துவக் கருத்துகள்**
வ/ப இலங்கை திரிபோஷ கம்பனிக்கு கைநூலொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு வ/ப இலங்கை திரிபோஷ கம்பனி பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கபில ரத்னசிங்க என்ட் கம்பனி**
**பட்டய கணக்காளர்கள்**